திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
நவம்பர் 2020, விலை ரூ.5/-

## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்

### கார்த்திகை பிரம்மோத்ஸவம்
### 2020 நவம்பர் 11 முதல் 19 வரை



திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதி தாயார்
கார்த்திகை
பிரம்மோத்ஸவ
சிறப்பிதழ்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



16-10-2020
முதல்
24-10-2020
வரை
நடைபெற்ற
திருமலையப்ப ஸ்வாமி
நவராத்திரி
பிரம்மோத்ஸவத்
திருக்காட்சிகள்















அநந்தவிஜயம் ராஜா
குந்தீபுத்ரோ யுதி4ஷ்டி2ர: |
நகுல: ஸஹதே3வச்ச
ஸுகோ3ஷமணிபுஷ்பகௌ||

குந்தியின் மகனான அரசர் யுதிஷ்டிரர்
அநந்தவிஜயம் என்ற பெயர் கொண்ட
சங்கையும், நகுலனும் சகதேவனும்
ஸுகோஷம், மணிபுஷ்பகம் என்ற பெயர்
கொண்ட சங்குகளையும் முழக்கினார்கள்

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–16*



ஏமனி பொக3டுது3மே இகநினு
ஆமனி சொப3கு3ல அலமேல் மங்கா3
தெலிகன்னுல நீ தேடலே கத3வே
வெலயக3விபு4னிகி வென்னெலலு
புலகல மொலகல பொது3லிவி க3த3வே
பலமரு புவ்வுல பானுபுலு
திய்யனி நீமோவி தேனெலே கத3வே
விய்யபு ரமணுனி விந்து3லிவி
முய்யக மூசின மொலக நவ்வுக3தெ3
நெய்யபு கப்ரபு நெரிபா3கா3லு
கைவசமகு3 நீ காகி3லே க3த3வே
ஸ்ரீவேங்கடேஸ்வரு சிரி நக3ரு
தாவு கொன்ன மீ தமகமுலே கதே3
காவின்சின மீ கல்யாணமுலு

வெண்ணிலவைப் போன்ற உன்னுடைய கருணை பொங்கும் கண்களல்லவோ உன் தலைவனுக்கு உற்சாகத்தை தரும். தோன்றி மறையும் உன்னுடைய புல்லரிப்பல்லவோ உன் தலைவனை அணைக்க நீ விரித்திடும் பூமெத்தையாகும். உன்னுடைய உதடுகளில் சொரியும் தித்திப்பான தேனல்லவோ தலைவனுக்கு நீ படைக்கும் சுவையான விருந்து. மலர்ந்தும் மலராத உன் புன்சிரிப்பல்லவோ உன்னுடைய தலைவனுக்கு நீ வழங்கும் மணம் மிகு தாம்பூலம். உன் கையரவணைப்பல்லவோ உன்னுடைய தலைவனான திருவேங்கடமுடையானின் அழியாச் செல்வம். இருவரின் நேசத்தில் வளரும் உங்களுடைய தெய்வீக தாம்பத்தியமே எங்களுக்கு சகல மங்களங்களையும் உண்டாக்குகின்றது.

*- அன்னமய்யா*



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்
# ஸப்தகிரி சமய மாத இதழ்
(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

**இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை!** **இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!**





கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!

**பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.**

அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
"ஸப்தகிரி" படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... "ஸப்தகிரி" படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பேணுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!

## சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

அலுவலக பணிநாட்களில்
"ஸப்தகிரி" மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...
அலுவலகம் : 0877-2264543
டி.டி.பி. பிரிவு : 0877-2264359
ஆசிரியர் : 0877-2264360

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்
**sapthagiri_helpdesk@tirumala.org**




*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர்** K. **ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

**நீங்கள் ஸப்தகிரி இதழை**
**www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு**
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

மலர் 51

## உள்ளுறை

இதழ் 06

| | பக்கம் |
|---|---|
| **ஆழ்வார்கள் போற்றும் பிராட்டி** - பேராசிரியர் ஏ.வி.ரங்கசாரி, சென்னை. | 7 |
| **தாயாரும் தேசிகனும்** - டாக்டர் டி.எஸ்.ஆர்.நாராயணன், திருப்பதி. | 13 |
| **பஞ்சமி தீர்த்தம்** - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 16 |
| **மஹாலக்ஷ்மியின் மஹிமை** - இதிஹாஸமயம் வீ.சீதாராமன், சென்னை. | 19 |
| **"ஸ்ரீ" ஸ்தவம்** - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 23 |
| **சத்யபாமா தேவியின் பெருமை** - திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி, கேரளா. | 51 |
| **திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்** - திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 55 |
| **அன்னமய்யா போற்றும் தாயார்** - திருமதி மைதிலி சம்பத், செகந்திரபாத். | 59 |
| **தாயாருக்கு சமர்ப்பிக்கப்படும் நைவேத்யங்கள்** - திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 64 |
| **பெரியபிராட்டியார் ஸ்ரீபத்மாவதி தாயார்** - டாக்டர். கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 69 |
| **இராசிபலன்- நவம்பர் 2020** - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 73 |

### வாசகர்களுக்கு...

***இவ்விதழ் தாயார் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.***

*-பிரதான ஆசிரியர்*

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ***ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.***
பின்னட்டை : ***ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம், திருச்சானூர்.***

உங்களுடன்...

# ஸ்ரீபத்மாவதி தாயார் கார்த்திகை பிரம்மோத்ஸவம்

வைணவ சம்பிரதாயம் "ஸ்ரீ"யோடு இணைந்த சம்பிரதாயமாகும். "திரு" என்ற சொல்லை சேர்க்காது வைணவத்தில் எவ்வார்த்தையுமில்லை. பெருமாளுக்கும் "திருமால் என்றே பெயர். "திரு" என்பது பிராட்டியைக் குறிக்கும் அடைமொழி. அதாவது பிராட்டியின் சம்மந்தம் உடையது. பொதுவாக திருமண வைபவத்தைக் குறிப்பிடும்போதும் ஆண்டாள் கல்யாணம், சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம், பத்மாவதி கல்யாணம் என்று பிராட்டியின் சம்மந்தமிட்டேச் சொல்வது வழக்கமாகும்.

வைணவ ஆலயங்களிலும் நாம் முதலில் தரிசிக்கவேண்டியது தாயாரைத்தான். தாயார் சன்னதிக்குச் சென்று தாயாரை தரிசித்து அவள் புருஷகாரத்தோடு தான் பெருமாளை தரிசித்தல் வேண்டும் என்பது வைணவ மரபாகும். அதுமட்டுமின்றி ஸ்வாமியை மட்டும் தனியே சேவிப்பதைக் காட்டிலும் தாயாரோடு சேர்த்து ஸ்வாமியை சேவித்தால் தான் பூரண அருள் கிட்டும் என்பது வைணவர்களின் நம்பிக்கை. பிராட்டியின் சிபாரிசினால் மட்டுமே ஸ்வாமி அருள்புரிவார்.

எம்பெருமானோ பாவம் பண்ணின ஜீவாத்மாக்களை அவ்வளவு எளிதில் மன்னிப்பதில்லை. இந்த ஜீவாத்மாக்களின் தாயாக இருந்து அவர்களின் பாவங்களை மன்னித்தருள எம்பெருமானுக்கு தயைகுணத்தையளிப்பவள் பிராட்டியே ஆவார். பிராட்டி பர்தாவான எம்பெருமானுக்கு போகத்தையும், பிள்ளைகளான ஜீவாத்மாக்களுக்கு யோகத்தையும் அளித்து பரமாத்மாவிடம் கரைசேர துணைபுரிகிறாள். பிரணவ மந்திரமான ஓங்காரத்திலும் "அ"காரமாகிய எம்பெருமானோடு "ம"காரமாகிய ஜீவாத்மாவை சேர்த்து வைக்கும் பாலமாக "உ"காரமாகிய தாயார் விளங்குகின்றார். அதாவது துவய மந்திரமும் பிராட்டியோடு உடனுறை பெருமாளையே பிரபத்தி பண்ண வேண்டும் என்கிறது.

இது குறித்தே பொய்கையாழ்வாரும் *''ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு''* (67) என்கிறார். அதாவது, எம்பெருமானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உள்ள தொடர்பினை உணர்த்துவதோடு பிராட்டியுடன் கூடியிருக்கும் எம்பெருமான் மட்டுமே நமது தொண்டினை ஏற்றுக்கொள்வார் என்கிறார். பிராட்டியின் சம்பந்தமின்றி எந்தச் செயலும் முழுமையடைவதில்லை என்பதினை இதனால் நாம் அறிய முடிகின்றது. ஆழ்வார்களும் எம்பெருமானை "திரு"மால், "திரு"வாழ் மார்பன், "திரு"மகள் கேள்வன் என்றே குறிப்பிடுகின்றனர். பிராட்டியும் அவ்எம்பெருமானை விட்டு கணப்பொழுதும் பிரிந்திருப்பதே இல்லை. இதனையே நம்மாழ்வாரும் *''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறை மார்பா''* என்று பாசுரமிடுகிறார். எம்பெருமான் அவதாரம் எடுக்கும் போதெல்லாம் பிராட்டியும் ஒக்க அவதரிக்கிறாள்.

சீதாபிராட்டியை துன்புறுத்திய காகாசுரனும் அப்பிராட்டி அருகில் இருந்ததினால் ஸ்வாமியின் அருள்பெற முடிந்தது. அதுவே, இராவணப்போரின்போது ஸ்ரீராமனுடன் சீதாபிராட்டி உடன் இல்லாததால் இராவணன் உயிர்மாண்டான். எனவே, ஸ்வாமியை அடைய பிராட்டியின் அருள் கட்டாயம் தேவை.

இக்கலியுகத்திலும் ஜீவாத்மாக்களை காக்கும் பொருட்டே திருவேங்கடமுடையான் தவமியற்றி திருச்சானூரிலே ஸ்ரீபத்மாவதி தாயாரை எழுந்தருளச் செய்தார். அப்பேற்பட்ட பிராட்டிக்கு இப்பூவுலகில் எங்குமில்லாத அளவிற்கு பிரம்மோத்ஸவம் நடைபெறுகின்றது என்றால் அது மிகையன்று. திருவேங்கடமுடையானுக்கு நடைபெறுவது போன்றே ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் அவள் அவதரித்த கார்த்திகை மாதத்தில் மிகச்சிறப்பாக பிரம்மோத்ஸவம் நடைபெறுகின்றது. அத்தாயார் இக்கலியுக ஜீவாத்மாக்களைக் காக்க ஒன்பது நாட்களும் வெவ்வேறு வாகனங்களில், வெவ்வேறு அலங்காரங்களில் எழுந்தருள்கிறார். தானே தாயாராகவும், தானே பரமாத்மாவான எம்பெருமானாகவும் இக்கலியுக ஜீவாத்மாக்களின் பாவங்களைப் போக்க திருக்காட்சியளிக்கின்றார். வாருங்கள் ஜீவாத்மாக்களாகிய நாம் அப்பரமாத்மாவை அடைய அத்தாயாரை தரிசித்து அருள் பெறுவோம்.

# ஆழ்வார்கள் போற்றும் பிராட்டி

பேராசிரியர்
ஏ.வி. ரங்காசாரி,
சென்னை, 04144-220425

வைஷ்ணவம் என்பது பிராட்டியோடு கூடிய விஷ்ணுவை பரம்பொருளாகக் கொண்டது ஆகும். வேத மந்திரம் பிராட்டியின் பல தன்மைகளை விவரிக்கிறது. அவையாவன:

உலகிற்கு எல்லா வளங்களையும் அருளுபவர். அனைவருக்கும் மன வலிமையை அருளுபவர். மகிழ்ச்சியை உண்டு பண்ணுபவர். காற்று முதலிய தேவதைகளை ஆணையிட்டு நன்மைகளை உண்டு பண்ணுபவர். சுவர்க்கம் பூமி முதலிய உலகங்களைத் தாங்குகிறார்.

விஷ்ணுவிற்குப் பத்தினியாய், உலகுக்குத் தலைவியாய் உள்ளார்.

பிராட்டியைப் பற்றிய வேத பாகமான ஸ்ரீசூக்தத்தில் 15 ரிக்குகள் திருமகளின் தனித் தன்மையைத் தெரிவிக்கின்றன. அவையாவன:

பொன்நிறம் உடையவள். நற்செல்வங்கள் அனைத்தும் அளிப்பவள். எப்பொழுதும் நிறை மனத்தை உடையவள். அன்பர்கள் இடத்தில் கருணை உள்ளவள். தேவனான ஹரியுடன் சேர்ந்து இருப்பவள். அதனால் வண்மை மிக்கவள். அடியவர் துன்பங்களைப் போக்குபவள். பசி, தாகம், தூக்கம், வளமின்மை ஆகியவற்றைப் போக்குபவள். ஈர நெஞ்சுள்ளவள். அடியவர்களைப் போஷிப்பவள். ஆனந்தமே வடிவெடுத்தவள்.

### பிராட்டிக்கு "ஸ்ரீ" என்று பெயர் :

"ஸ்ரீ" என்பதற்கு நான்கு வகையான பொருள்கள் உள்ளன. 1)எல்லோராலும் சேவிக்கப்படுபவள் (பெருமானால் தவிர) 2)அனவரதமும் எம்பெருமானைப் பற்றியே இருப்பவள். எம்பெருமானுடைய ஸ்வாதந்திரியத்தையும் சேதனனுடைய அபராதத்தையும் கண்டு அகல மாட்டாள் 3) அடியார் விண்ணப்பங்களைச் செவி சாய்ப்பவள் 4)பேறு தருபவன் எம்பெருமானாகையாலே, தகுந்த சமயம் பார்த்து, பெருமானிடம் பரிந்துரைப்பாள். உமக்கும் அவனுக்கும் உண்டான உறவு ஒழிக்க ஒழியாதது. அவன் நம்மைத் தேடி வந்தபோது விட்டு விடக் கூடாது. எனவே தண்டனை தரக்கூடாது என்று வந்தவர்கள் இடத்திலும், வராதவர்கள் இடத்திலும் கருணையைக் காட்டி அருள் புரிய வேண்டும் என்பாள்.

### மகாபாரதத்தில் பிராட்டி வைபவம் :

மகாபாரதம், பாற்கடல் கடைந்தபோது பிராட்டி அவதரித்ததைக் கூறுகிறது. "ஸ்ரீ" யான











வ ள் பாற்கடலில் தோன்றினாள். ப்ருகு முனிவருக்கு மகளாக லக்ஷ்மி அவதாரம் செய்தாள். விஷ்ணுவின் திருமார்பில் வசிப்பவள். நல்லோரிடம் மட்டுமே இருப்பவள்.

**பொய்கை ஆழ்வார் :**

பொய்கை ஆழ்வார் திருமகளுடன் கூடிய எம்பெருமான் திருக்கோவலூர் இடைகழியில் வந்து நின்றமையை,

> *''நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்*
> *பாயும் பனி மறைத்த பண்பாளா! - வாசல்*
> *கடைகழியா உள்புகாக் காமர் பூங்கோவல்*
> *இடைகழியே பற்றி இனி''* –86

என்று வியந்து பேசுகிறார்.

திருமகள் எம்பெருமான் மார்பில் எழுந்தருளியிருப்பதை *''கார் வண்ணத்து ஐய! மலர்மகள் நின் ஆகத்தாள்''* (28) என்றும், திருமகளுடன் கூடியிருப்பது எம்பெருமானுக்குத் தனிச்சிறப்பு என்பதை *''மங்கையான் பூமகளான்''* (74) என்றும் காட்டியுள்ளார்.

எம்பெருமான் திருமகள், மண்மகள், ஆய்மகள் ஆகிய மூவரோடு இருந்தாலும் திருமகளுக்கே அற்று தீர்ந்திருப்பதை, *''திருமகளும் மண்மகளும் ஆய் மகளும் சேர்ந்தால் திரு மகட்கே தீர்ந்தவாறு என் கொல்''* (42) என்று வியந்து, அதனால் திருமகளோடு கூடிய எம்பெருமானைப் பற்றுவதே சிறந்த அறிவு என்பதை *''தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு''* (67) என்று அருளிச் செய்து உள்ளார்.

**பூதத்தாழ்வார் :**

கரிய திருமாலின் அழகிய திருமேனி தானே வந்து காட்டிக் கொடுப்பதற்கு முன், நம்முடைய திருமகள் தானே புருஷகாரம் செய்து காட்டிக் கொடுப்பாள் என்பதை, *''காணக்கழி காதல் ..... திருமாலை நங்கள் திரு''* (56) என்னும் பாசுரத்தில் அடியவர்களுக்காகப் புருஷகாரம் செய்யும் பிராட்டி ஒரு நொடிப் பொழுதும் அவனை விட்டுப் பிரிவதில்லை என்பதை, *''வடிக்கோல வாள் நெடுங்கண்..... கோலத்தால் இல்லை குறை''* (82) என்றும், அதனால் எம்பெருமானை அடைவதற்கு காலம் பார்க்க வேண்டியதில்லை என்றும், திருமகளோடு கூடியிருக்கும் தெய்வத்தையே அனைவரும் தொழ வேண்டும் என்பதை, *''திருமங்கை நின்றருளும் தெய்வம் நா வாழ்த்தும் கருமம் கடைப்பிடிமின் கண்டீர்''* (57) என்றும் தெளிவுபடுத்துகிறார்.

**பேயாழ்வார் :**

பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றிய விளக்கில் திருமகளைக் கண்டேன். அவளுடைய பொன்னிறத் திருமேனியில் எம்பெருமான்









திருமேனியைப் பொன்னிறமாகக் கண்டேன் என்பதை *"திருக் கண்டேன் பொன் மேனி கண்டேன் திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன்"* என்று கூறித் திருமகளோடு கூடி இருப்பதாலே அவருக்குச் சிறப்பு அழகு பிரகாசம் என்பதை உணர்த்துகிறார்.

கரிய மேகம் போன்ற பெருமாள் திருமேனியில் பொன்னிறமுடைய திருமகள் உறைந்திருப்பது மேகத்தில் மின்னல் தோன்றுவது போல் உள்ளது என்பதை *"பொலிந்திருண்ட கார்வானில் மின்னே போல் தோன்றி மலிந்து திருவிருந்த மார்பன்"* (57) என்று அருளிச் செய்திருக்கிறார். நிறைவில் சக்ராயுதத்தைக் கையில் ஏந்தியவனும், குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்தவனும், மலை போன்ற எம்பெருமானுடன் எப்போதும் இருப்பவளும், ஆகாயத்தில் மின்னல் போன்று விளங்குபவளும், தாமரை போன்ற கண்களை உடையவளும், தேன் நிறைந்த தாமரைப் பூவில் வசிக்கும் திருமகளே நமக்கு என்றும் அடைக்கலம் என்பதை, *"சார்வு நமக்கென்றும் சக்கரத்தான்... தேனமரும் பூ மேல் திரு"* (100)என்று கூறி நிறைவு செய்கிறார்.

**திருமழிசை ஆழ்வார் :**

திருமழிசை ஆழ்வார் திருமகளோடு கூடியிருப்பவனைத் தவிர மற்ற தேவர்கள் பரம் பொருள் அல்ல என்பதை,*"திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு"* என்று (நான்முகன் திருவந்தாதி 53) சொல்லி எம்பெருமான் திருமகளோடு கூடியவன் என்பதை *"திருமால் திருவிருந்த மார்பன் போன் பாவை கேள் வா புண்டரீக பாவை சேரும் மார்ப", "தேனுலாவு மென் மலர் மங்கை மன்னி வாழும் மார்ப திருக்கலந்து சேரு மார்ப வல்லி நாண் மலர்கிழத்தி நாத"* என்று பல படியாகப் பேசியுள்ளார்.

**நம்மாழ்வார் :**

நம்மாழ்வார், திருமகள் அடியவர்களின் பாவங்கள் அனைத்தையும் போக்கும் வல்லமை உடையவள் என்பவதை *"வேரி-மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே"* திருவாய்மொழியில் அருளிச் செய்துள்ளார். அதே போன்று பெறற்கரிய பயன்களைத் தரும் பொழுது பெருமாள் பிராட்டியோடு கூடியிருந்தே தருவான் என்பதை, *"தருமவரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன் பெருமை உடைய பிரானார் இருமை வினை கடிவாரே"* என்று அருளிச் செய்து உள்ளார். அடியவர்களுக்குப் புருஷகாரம் புரிவதற்கே திருமகள் ஒரு நொடிப்பொழுதும் பெருமாளை விட்டுப் பிரியாமல் இருக்கிறாள் என்பதை, *"அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறை மார்பா"* (6.10.10) என்று திருவேங்கடத்து எம்பெருமானை நோக்கி அருளிச் செய்திருக்கிறார். திருமகள் எப்பொழுதும் எம்பெருமான் திருமார்பில் உறை



**விஷ்ணு புராணம் :**

பிராட்டி வைபவமாகக் கூறும் செய்திகளாவன: உலகிற்குத் தாயான திருமகள் நித்யமானவள். விஷ்ணுவிற்குப் பத்தினீயான பிராட்டி அவரை விட்டுப் பிரியாதவள். எம்பெருமான் எல்லா இடங்களிலும் பரவி உள்ளது போல, இவளும் அப்படியே பரவி இருப்பவள்.



திருமால் இராமனாக அவதரித்தபோது பிராட்டி சீதையாக அவதரித்தாள். கண்ணனாக அவதரித்த போது ருக்மிணியாக அவதரித்தாள். மற்ற எல்லா அவதாரங்களிலும் பெருமாளை விட்டுப் பிரியாதவளாக இருக்கிறாள்.

வதை *''மானேய் நோக்கி மடவாளை மார்வில்....''* *''திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார்''* என்று பலபடியாகக் கூறி உள்ளார். திருமகளோடுக் கூடிய எம்பெருமானை நாம் நாள்தோறும் வணங்கினால் நம்முடைய வினைகள் அனைத்தும் மாய்ந்து போகும். எனவே திருமகளோடு கூடிய திருமாலையே வணங்க வேண்டும் என்பதை, *''நாளும் நின்றடு நம பழமை... மாளும் ஓரிடத் திலும் வணக்கொடு மாள்வது வலமே''* (1.3.8) என்று உபதேசம் செய்கிறார். மேலும், திருமகளோடு கூடியுள்ள உன்னை அடைந்து அனுபவிக்காமல் மேலுள்ள காலம் அடியேன் துடிக்க வேண்டுமோ என்பதை *''கோலத் திருமாமகளோடு உன்னைக்கூடாதே சாலப் பலநாள் அடியேன் இன்னம் தளர்வேனோ''* (6:9:3)என்று சொல்லித் தளர்கிறார். நிறைவில் நம்மாழ்வார் தான் திருமகளோடு கூடிய எம்பெருமான் திருவடிகளை அடையப் பெற்று தன் துன்பமெல்லாம் தீரப் பெற்றதை,

*''ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப*
*கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன்*
*திருவடியே''*

(4.9.10) என்று தெரிவிக்கிறார்.

**குலசேகர ஆழ்வார் :**

குலசேகர ஆழ்வார் தமது பெருமாள் திருமொழியில்,

*''திருமாது வாழ் வாட்டமில் வனமாலை மார்பன்*
*திருமார்பன் சீராளும் வரை மார்பன்*
*தோடுலா மலர்மங்கை தோளிணைத் தோய்ந்தவன்*
*அல்லி மாமலர் மங்கை நாதன்*
*அந்தாமரை பேதை மா மணவாளன்*
*அல்லி மலர் திருமங்கை கேள்வன்''*

என்று தாமரைப் பூவில் வசிக்கும் திருமகளுடன் கூடிய எம்பெருமான் என்று அருளிச் செய்துள்ளார்.

**பெரியாழ்வார் :**

பெரியாழ்வார் பெருமாளுக்கு திருப்பல்லாண்டு பாடும்பொழுது முதன்முதலில் *''வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு''* என்று பாடி, மேலும் தன் திருமொழியில் *''திருவுடையான் மணவாளா மாமலராள் மணவாளா போதமர் செல்வக் கொழுந்து புணர் திருவெள்ளறையானை''* என்று திருமகளின் மணவாளனாகவே பாடியுள்ளார். நிறைவில் விஷ்ணுவைத் தன் சித்தத்திலே வைத்துள்ள விஷ்ணு சித்தர் திருமகளுடன் கூடிய பெருமாளே தன் நெஞ்சில் எழுந்தருளி இருக்கிறார் என்பதை, *''அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து... பள்ளி கொள்கின்ற பிரானைப் பரவுகின்றான் விட்டு சித்தன்''* (5.2.10) என்று நிறைவு செய்துள்ளார்.

**தொண்டரடிப்பொடியாழ்வார்/திருப்பாணாழ்வார் :**

*''திருமறுமார்வ''* என்று திருவையும் மறுவையும் உடைய மார்பை உடையவனே என்றும், திருப்பாணாழ்வார் *''திருவார மார்பு''* என்று திருவும் ஆரமும் திகழ்வது திருவரங்கன் மார்பு என்றும் அனுபவித்துள்ளார்.

**திருமங்கை ஆழ்வார் :**

திருமங்கை ஆழ்வார் திருமகள் அருளால் உலகை ஆளும் பேற்றினைப் பெறலாம் என்பதை *"திருமாமகள் தன்னருளால் உலகில் தேர் மன்னராய் ஒளி மாகடல் சூழ் செழுநீர் உலகாண்டு திகழ்வர்களே"* என்றும், திருமகள் திருவருளால் பரமபதம் ஆகிய பொன்னுலகை அடைந்து விளங்குவர் என்பதை, *"பூ வளரும் திருமகளாலருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர் தாமே"* என்றும் தெரிவித்துள்ளார்.

மற்றைய ஆழ்வார்கள் போலவே கலியனும் திருமகள் உறையும் மார்பை உடையவன் என்பதை *"செய்ய வன் உறை தரு திருமார்பன்.... அல்லி மாதர் அமரும் திருமார்பினன்"* என்று காட்டியுள்ளார். அத்திருமகளுக்கும் அப்பெருமையை அடையக் காரணமாக இருப்பவன் எம்பெருமான் என்பதை *"திருவுக்கும் திருவாகிய செல்வா"* என்று உணர்த்துகிறார்.

திருமகளின் அழகைப் பெரிய திருமடலில், *"மன்னு மரகதக் குன்றின் மருங்கே ஓர்... குலமிரண்டாய் அன்ன திரு உருவம்"* மரகதக் குன்றம் போன்ற எம்பெருமானின் அருகே இளம் வஞ்சிக் கொடி போன்று திருமகள் எழுந்தருளி உள்ளார்.

அன்னம் போன்ற நடையை, மான் போன்ற பார்வையை, மயில் போன்ற கூந்தலை, மின்னல் போன்ற இடையை, மூங்கில் போன்ற தோள்களையும், செப்பு கலசங்கள் போன்ற மார்பினை, தொண்டைக்கனி போன்ற கண்களை உடையவள் அத்திருமகள் என்றும் அவளை எம்பெருமானுக்கு விசேஷமாக அனுபவித்துள்ளார்.

**ஆண்டாள் :**

ஆண்டாளும் திருமகளை எம்பெருமானுக்கு விசேஷமாகவே குறிப்பிடுகிறாள். திருப்பாவையில் *"திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்"* என்றும், எம்பெருமான் திருமார்பில் பிராட்டி உறைகின்றாள் என்பதை *"திருமங்கை தங்கிய சீர் மார்பன்"* என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**மதுரகவியாழ்வார் :**

மதுரகவியாழ்வார் *"கரிய கோலத் திருவுருக் காண்பன்"* என்று கூறியுள்ளார். பெரிய பிராட்டி அம்சமான மற்ற பிராட்டிகளுக்கும் "திரு" என்பது உண்டு. *"நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்"* நப்பின்னையை "திரு" என்றது ஆண்டாள் பிராட்டி. பெருமானையும் "திரு" என்பர் கலியன்.

*"சிந்தனை தன்னுள் நீங்காதிருந்த திருவே மருவினிய மைந்தா"* (4.9.2), *"செங்கண் நெடிய திருவே"*, *"தேனிடைக் கரும்பின் சாற்றைத் திருவினை மருவி வாழார்"* (திருக்குறுந்தாண்டகம்) என்று பாடியுள்ளார்.


ஆக, வேதங்கள் இதிகாச புராணங்கள் ஆகிய வற்றால் பெரிய பிராட்டியார் வைபவத்தை ஆழ்வார்களின் பாசுரங்களை முழுமையாகப் பேசி மக்கள் அனைவரும் பிராட்டியின் பெருமையை உணர்ந்து, அவள் புருஷகாரத்தினால் நல்வாழ்வு பெற பெருமாளைப் பற்ற வேண்டும் என்ற நிலையை ஆழ்வார்களின் பாசுரங்களே நமக்குக் காட்டிக்கொடுத்தன.

**சங்க இலக்கியங்களில் பிராட்டி வைபவம் :**


முதல் பரிபாடல் திருமாலைக் கூறும்போது *"மாயுடை மலர் மார்பின் மைஇல் வால் வளை மேனி"* திருவடிகளைத் தன் மார்பில் கொண்டவன் என்கிறது. புறநானூறு – உலகப் பற்று விட்டவர்களை திருமகள் கைவிட மாட்டாள் என்கிறது. வேதமே இதைப் பகர்வதாக முதல் பரிபாடல்.

*"விரிமலர் சினை இய கண்னை பூவை*
*விரிமலர் புரையும் மேனியைமேனித் திருஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை"*

"திரு" மிகுந்து விரும்பி அமர்ந்த மார்வனை – நீ – உடமை – என்று வேதங்களை திருமறு மார்பு நீ அருள வேண்டும். திருமகளைப் புருஷகாரமாகக் கொண்டு திருமாலை வேண்டுவது.



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 51



தொகுப்பு :
திரு. டி.ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய
54ம் பக்கம்
பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

1. அருளுகின்ற அலர்மேல் மங்கை தாயார்.....(5)
4. கலைகளுக்கானவர் ..... (3)லக்ஷ்மி.
5. திருவட்டாறு, திருவெள்ளியங்குடி கோயில்களில் குடியிருப்பவள்....(7)
12. வெற்றிலை ....(5) தாயாரின் வாசஸ்தலம் என்பர்.
14. தாயாரின் அடையாளமாக நெற்றியில் வைக்கும் மங்கள சின்னம்..(5)
15. வைணவர் தாயாரை இப்படி அழைப்பர்....(5).
16. திருக்கூடலில் இருந்து அருள் தரும் தாயாரின் பெயர்.....(6)
18. அருள் வடிவான (திரு) அன்பில் தாயார் பெயர் ....(7)
19. இவரது உள்ளத்தில் தாயார் உறைந்துள்ளதால்....(5)
22. ....(4) எனும் மங்கள பொருளில் மஹாலக்ஷ்மி கலந்துள்ளார்.
24. திருக்கண்ணங்குடியில் திருமகளின் திவ்ய நாமம்....(8)

### வலமிருந்து இடம்

3. அஷ்ட லக்ஷ்மிகளில் முதலாவது ......(2) லக்ஷ்மி.
4. வெற்றியைத் தருபவர்.....(3)லக்ஷ்மி.
8. ஸ்ரீராமபிரானின் பத்தினியான தாயார்....(2)
11. மஹாலக்ஷ்மி அமர்ந்துள்ள தாமரையின் வேறு பெயர்.....(4)
17. செல்வங்களை வழங்குபவர் ....(2) லக்ஷ்மி.
22. மஹாவிஷ்ணுவின் பத்தினி....(5)
25. திருவல்லிக்கேணி திருக்கோயிலில் தாயாரின் பெயர்.....(5)

### மேலிருந்து கீழ்

1. திருப்பிரிதி திருநகரில் வாசம் செய்கின்ற வாசனையாள்.....(7)
2. கேட்டதை அருள்பவர்....(5).
5. திருநாவாய் நகரில் உள்ள பூமகள்....(6)
6. திருவள்ளூரில் அருளும் தாயார்.....(3) வல்லி.
7. உள்ளத்தில் உறுதியளிக்கும் தாயார்....(3) லக்ஷ்மி.
9. லக்ஷ்மி தாயாரின் ஒரு இருப்பிடம், வெளிச்சம் தருவது.....(3)
10. யானை மீது அமர்ந்துள்ளவர் .....(2)லக்ஷ்மி.
13. ஒப்பிலியப்பன் கோயிலில் உறைந்துள்ள நிலமகள்.....(4)
18. எட்டு தாயார்கள்......(3) லக்ஷ்மிகள்.
19. திருமகள்......(3)

### கீழிருந்து மேல்

12. திருமகள் அமர்ந்துள்ள கமலம்....(3)
13. திருக்கரம்பனூரில் தாயாரின் பெயர்.....(5)
16. திருவரகுணமங்கை திருத்தலத்தில் அமர்ந்து அருள்கின்ற தாயார்....(7)
20. லக்ஷ்மி தாயார் தோன்றிய நீர் நிலை....(6)
21. தாயாரின் அழகு.....(6)
23. மக்கள் செல்வத்தை அருளுபவர் ....(4) லக்ஷ்மி.
24. திருஊரகம் தலத்தில் அமர்ந்தருளும் தாயாரின் பெயர்.....(6)

# தாயாரும் தேசிகனும்



**முன்னுரை :**

நம் ஆசார்யர்கள் ஆழ்வார்கள் என அனைவரும் தாயாரை கொண்டாடுவதில் மிகவும் வல்லவர்கள். காரணம் என்னவென்றால் உலகில் அனைத்து ஜீவராசிகளும் தம் தம் தாயினிடத்தில் ப்ரீதியுடன் இருப்பதே ஆகும். அதற்கு முக்கிய காரணம் தாயாரிடத்திலுள்ள மென்மை, வாஞ்சை, வாத்ஸல்யம், தவறுகளைக் காணாதது போல் இருத்தல் போன்றவையே. தந்தையும் நம்மிடத்தில் பிரியமுடன் இருந்தாலும் கண்டிப்பு இருக்கும். தாயிடம், பிரியம் மட்டுமே காணப்படும். ஸ்ரீ பராசரமுனிவர் கூறுவதைக் காணீர். *''தாரணாத் துக்கஸஹனாத் தயோர்மாதா கரீயசீ''*

பத்துமாதம் சுமந்து நம் துக்கத்தையும் தம் துக்கமாக பாவித்து ரக்ஷிப்பதாலும் பிதாவைக் காட்டிலும் தாயார் உயர்ந்தவள் என்பது ஸ்ரீ பராசரரின் திருவாக்காகும். ஆகையால், தாயார் என்றாலே மிகவும் உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி என்றால் ஜகந்மாதாவான பத்மாவதி தாயாரைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ! ஸ்வாமி ஸ்ரீதேசிகன் நம் தாயாரைப் பற்றிக் கூறுவதைக் காண்போம் இக்கட்டுரையில்.

**ஸ்ரீபத்மாவதி தாயாரின் பெருமை : -**

ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸ்துதியில், *''லக்ஷ்மீ: பத்மா ஜலநீதனயா விஷ்ணுபத்நீந்திரேதி''* என்று அருளுகிறார். இதில் தாயாரின் திருநாமங்களைக் கூறும்போது *''லக்ஷ்மீ, பத்மா, கடல் கன்யகை, விஷ்ணுவின் மனைவி, இந்திரா''* என்று அழகாக வரிசைப்படுத்துகிறார்.

இதில் இரண்டாவது பெயர் பத்மா என்பதாகும். தாமரையாள் என்று பொருள். ஸ்ரீநம்மாழ்வாரும் *''அலர்மேல் மங்கை உறைமார்பா'' ''வேரிமாறாத பூமேலிருப்பாள்''* என்றெல்லாம் போற்றுகின்ற தாமரையாள் நம் திருவேங்கடத்துச் செல்வனின் திருமார்பில் வீற்றிருப்பவளும், திருச்சானூரை தம் தேஜஸ்ஸால் அலங்கரிப்பவளுமான ஸ்ரீபத்மாவதி தாயாரேயாவார்.

அத்தாயாரையே ''பத்மா'' என்ற சொல்லால் உபயோகிக்கிறார். ஆகையால், இந்தத் தாயாரே ஸ்ரீஸ்துதியில் போற்றப்படுபவர். நம் பத்மாவதித்தாயார்தான் அனைத்துலகையும் காத்தருள்பவர். அவருடைய கடைக்கண்பார்வையைக் கொண்டே நம் திருவேங்கடப் பெருமான் நம் அனைவரையும் ஆள்கின்றாராம். அதனாலேயே *''மங்களம் மங்களானாம்''* என்று தாயாரைப் போற்றுகிறார் ஸ்ரீ தேசிகன். அதாவது, மஹாபாரதத்தில் ஸ்ரீ பீஷ்மர் பெரு



# வெள்ளிக்கிழமை விசேஷம்

**திருமகளின் திவ்ய சரித்திரமும், திகட்டாத வழிபாட்டு முறைகளும், பல ஆயிரம் ஆண்டுகளாக பல்வேறு மக்களால், பலவித கோணங்களில், உருப்பெற்று, செழித்து, சிறப்பாக அளப்பரியதோர் ஆன்மீகச் சுவையுடன் அனுபவிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில புராணங்களின் வலுவான ஆதாரத்தினை கொண்டது. சில பரம்பரையான சம்பிரதாயமாக வலுவான நம்பிக்கை என்ற நிலைப்பாட்டினைக் கொண்டது. வெள்ளிக்கிழமை மகாலக்ஷ்மிக்கு உகந்த நாளாக வழிபாட்டில் இடம் பெறுகிறது. ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் வெள்ளிக்கிழமை அன்று மூலவருக்கு அபிஷேகமும், மாலை நேரத்தில் உற்சவமூர்த்திக்கு அபிஷேக ஆராதனையும் நடப்பது விசேஷம்.**



மாளை புகழும்போது, *''பவித்ராணாம் பவித்ரம்யோ மங்களானாம் ச மங்களம்''* என்கிறார். உலகில் மங்களங்களுக்கெல்லாம் மங்களமாக எம்பெருமான் இருப்பது என்பது பொருளாகும்.

ஸ்ரீதேசிகன், பெருமாள் மங்களகரமானவர். தாயாரோ பெருமாளைக் காட்டிலும் மங்களகரமானவள் என்கிறார். ஏனென்றால் ஸ்ரீவால்மீகி பகவான் தம் ஸ்ரீமத் ராமாயணத்தில் *''அப்ரமேயம் ஸ்ரீ தத்தேஜ: யஸ்ய ஸா ஜன காத்மஜா''* – என்று கூறுகிறார். ஸ்ரீராமன் மிகுந்த ஒளியை உடையவன்; ஸ்ரீராமனுடைய தேஜஸ்ஸானது யாராலும் அறியப்படமுடியாது. ஏனென்றால் ஸ்ரீராமனுக்கு ஜனக மகாராஜரின் திருக்குமாரியான சீதாதேவி திவ்யமஹிஷியாக இருப்பதால் என்று இதற்கு பொருளாகும்.

ஆக ஸ்ரீபத்மாவதி தாயாருடைய சம்பந்தத்தால், சேர்க்கையால், தாயாருடைய கடாக்ஷத்தால்தான் நம் திருவேங்கடமுடையானுக்கும் ஏற்றம் வருகிறதாம்.

நம் தாயார் திருவேங்கடமுடையானுடைய வக்ஷஸ்தலத்தில் வீற்றிருக்கிறாள். அதுதான் தாயாருக்கு பிடித்த வாஸஸ்தலமாகும். *''தத்வக்ஷஸ்தல நித்ய வாஸ ரஸிகை''* நம் தாயாரல்லவா! அங்கு இருந்து கொண்டு இவ்வுலகையே ஆள்கிறபடியால் அனைவருக்கும் நல்லதையே செய்பவர் நம் பத்மாவதி தாயார். நமக்கு மட்டுமல்ல எம்பெருமானுக்கும் நல்லதைச் செய்கிறவள் நம் தாயார். அது எப்படி என்பதையும் விளக்குகிறார் ஸ்ரீதேசிகன். பெருமாளும் தாயாரும் தாயம் விளையாடுகிறார்கள். அவ்விளையாட்டைப் பார்த்து ரசிக்கிறவர்கள் நித்ய ஸூரிகள், முக்தர்கள் போன்றவர்கள்.

விளையாடுவதற்கு கட்டம் (பலகை) வேண்டும். அது இந்த ப்ரக்ருதி மண்டலம் (ப்ரபஞ்சம்). இதில் காய்கள் யார் என்றால் பிரம்மா முதலியவர்கள். அழகாக விளையாடுகிறார்கள்; நம் திருவேங்கடமுடையானோ பக்ஷபாதம் என்பதை அறியாதவன். ஆகையால் பெருமான் நம்மை நம் குற்றத்திற்கேற்ப தண்டிக்க முயலும் வேளையில் நம் பத்மாவதி தாயார் நம்மை தண்டனையிலிருந்து தப்பிக்க வைத்து பேற்றினை அடைய வைக்கிறார். அதாவது நமக்கு நற்கதியை எம்பெருமானுடன் சேர்ந்து கொண்டு அருள்வது ஸ்ரீபத்மாவதி தாயாரே என்பது சித்தமாகிறது.

இதில் பாருங்கள்! நமக்கு நல்ல ஜீவனத்தை இங்கும், நற்கதியை அங்கும் திருவேங்கடமுடையானின் கூடவே இருந்து அருள்வதால் நாம் திருவேங்கடவனின் அருளால் நன்றாக இருக்கிறோம் என்று பெருமாளுக்கு நற்சான்றிதழ் வாங்கிக் கொடுப்பவர் நம் தாயார் அல்லவா!

தம் திவ்யமஹிஷ்யான ஸ்ரீபத்மாவதி தாயாரால் பெருமாளுக்கு நற்பெயர் ஏற்படுகிறது என்பதுதான் உண்மை! மேலும், இந்த ஸ்தோத்ரத்தில் 25 சுலோகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் பல அரிய விஷயங்களை உள்ளடக்கியதாக உள்ளது. அனைத்தையும் எழுதுவது

என்பது இயலாது. கோடிட்டுத்தான் காண்பிக்கமுடியும். இதில் ஒரு சுலோகத்தின் கடைசி இரு அடிகளைப் பார்ப்போம்.

"யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே
தேவித்ருஷ்டிஸ்த்வதீயா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தன்வதே
ஸம்பதோகா:" –15.

நாம் ஒரு புகைப்படத்தைப் பார்க்கிறோம்; அது நம்மையே பார்ப்பது போல் இருக்கும். யார் புகைப்படத்தைப் பார்த்தாலும் அவர்களையே பார்ப்பதுபோல் நாம் அறிவோம். அதுபோல் நாம் ஸ்ரீபத்மாவதி தாயாரை சேவித்தால் யார் யார் சேவிக்கிறார்களோ அவர்களையே கடாக்ஷிப்பதுபோல் இருக்கும். அப்படி கடாக்ஷிக்கும் போது எந்தெந்த பக்கம் கடாக்ஷம் உள்ளதோ அந்தந்த விடத்தில் ஐச்வர்யம் குவியல் குவியலாக போட்டி போட்டுக்கொண்டு கொட்டுமாம். அப்படிப்பட்ட அருளைக் கொட்டும் பார்வைகளாம் நம் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு. அதுவே உண்மை! நாம் தாயாரையும், திருவேங்கடமுடையானையும் சேவித்தால் இங்கேயும் அங்கேயும் எங்கேயும் பலன்களைக் கொட்டவல்லது அவர்களின் அருட்பார்வைகள்!

இந்த பத்மாவதி தாயாரின் அருட்பார்வைதான் ஒரு பிரம்மசாரியின் திருமணத்தை முடித்துவைத்தது. பணமில்லாமல் திருமணம் ஆகாததால் ஸ்ரீதேசிகனை அவ்வாலிபன் வேண்ட ஸ்வாமி பிராட்டியை ஸ்ரீஸ்துதி கொண்டு போற்ற, அப்படியே பொற்காசுகள் கொட்டியது என்பது 16 வது சுலோகத்தால் விளங்கும்.

இவ்வாறு நம் தாயாரின் திருநாமங்களைக் கூறுவதால் பிறவிக்கடலிலிருந்தும் நாம் விடுதலையாவோம் என்பதை எட்டாவது சுலோகத்தால் கூறுகிறார். இவ்விரண்டு சுலோகங்களால் இங்கும் அங்கும் பெறப்படும் செல்வம் கூறப்பட்டது.

23 வது சுலோகத்தில் எம்பெருமான் நமக்கு தந்தை; ஸ்ரீபத்மாவதி தாயாரோ நமக்கு தாய்; இவர்கள் இருவரின் திருவடித்தாமரைகளில் நாம் சரணடைந்தால் நமக்கு அனைத்து ஐச்வர்யங்களையும் அருளி உங்களுக்கு, வேறு என்ன வேண்டும் என்று தாயாரின் மந்தஹாஸத் திருமுகம் கேட்பது போல் இருக்கிறதாம்! இங்கு வேண்டிய செல்வத்தைக் கொடுத்து, அங்கு வேண்டியதைக் கொடுத்து, இவர்களுக்கு நாம் ஒன்றுமே செய்யவில்லையே என்று வெட்கப்பட்டுக் கொண்டு கேட்பது போல் இருக்குமாம்.

இப்படி அனைத்து ஜீவராசிகளுக்கும் நல்லதையே செய்து, அனைவருடைய வாழ்விலும் இன்பங்களை அள்ளி வழங்கும் ஸ்ரீபத்மாவதி தாயார் புகழ் கூறும் ஸ்ரீஸ்துதியை சேவிப்போம்; ஸ்ரீபத்மாவதி தாயாரை கண்குளிர, அகங்குளிர ஆநந்தத்தோடு சேவித்து தாயாருடையவும், திருவேங்கடமுடையனான அலர் மேல் மங்கையுறைமார்பனுடையவும் அருளைப் பெறுவோம்!

டாக்டர். டி.எஸ்.ஆர். நாராயணன்
திருப்பதி, 82477 26824



ஆலயங்களில் மஹாவிஷ்ணுவுடன் காட்சி தரும் போது, மஹாலக்ஷ்மிக்கு இரண்டு கரங்கள் மட்டுமே உண்டு. ஒன்று அபய ஹஸ்தம், இரண்டு வரத ஹஸ்தம் எனப்படும். தனியாக சந்நிதியில் தரிசனம் தரும் போது மட்டும் நான்கு கரங்கள் காணப்படும். பின்புறம் காணப்படும் இரண்டு கரங்களும், தாமரை மலரை ஏந்தி இருப்பது ஸ்வர்ண ஹஸ்தம் எனப்படும். மஹாலக்ஷ்மியின் வாகனம் ஆந்தை என்கிறது பெங்காலி புராணம். மேற்கு வங்கத்தில் லக்ஷ்மி பூஜையில் ஆந்தைக்கு சிறப்பான இடம் உண்டு.



# பஞ்சமி தீர்த்தம்



அகில உலகங்களுக்கும் தாயாய் விளங்குபவள் ஸ்ரீஆதிலக்ஷ்மி. அவளே அஷ்ட லக்ஷ்மியாகவும் இருந்து இவ்வுலகினைக் காத்து வருகிறாள். ஸ்ரீவைகுண்ட வாசியாகிய இத்திருவே உலக நன்மைக் கருதியும், பக்தர்களை உய்வித்தல் பொருட்டும் இப்பூவுலகில் கார்த்திகை மாதம், சுக்ல பக்ஷ பஞ்சமியில், உத்திராட திருநட்சத்திரத்தில் பெருமை மிகு திருச்சானூர் திவ்விய தேசத்தில் இறைவன் அருளால் அமைந்த பத்மசரோவரத்தில் ஆவிர்பவித்து "ஸ்ரீஅலர்மேல் மங்கை", "ஸ்ரீபத்மாவதி தாயார்" என்னும் திருநாமங்களைத் தாங்கி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறாள். கருணையே வடிவானவளாக, திருமாலின் திருமார்பில் என்றும் நீங்காமல் உறையும் தாயாரின் அருள் பார்வை வேண்டி பக்தர்களும்

*''நாராயண ஸ்யஹ்ருதயே பவதீயதாஸ்தே*
*நாராயணோபி தம ஹ்ருத்கமலேயதாஸ்தே*
*நாராயணஸ்த்வ மபிநித்யமுமௌததைவ*
*தவ்திஷ்டதாம் ஹ்ரிதிமமாபிதயாவதி ஸ்ரீ''*

என்று பிரார்த்திக்கின்றனர்.

பத்மாவதி தாயார், திருச்சானூரில் கோயில் கொண்டு தன்னை நாடி வரும் பக்தர்களின் குறைகளைப் பரமவாத்ஸல்யத்தோடு போக்குவதோடும், எம்பெருமான் திருவேங்கடவனுக்கும் பக்தர்களுக்கும் பாலமாக இருந்தும், பக்தர்களின் பக்கம் நின்று பரிந்து பேசியும், எளிமையாக எம்பெருமான் அருள் கிடைத்திட செய்தும், பக்தர்களின் கோரிக்கைகள் யாவும் ஈடேறுவதற்குத் தாயாய் இருந்து நம்மை சேயாய்க் காத்து வருகிறாள்.

### பிரம்மோத்ஸவம் :

அகில உலகத்திற்கும் தலைவனாக விளங்கும் திருமலை தெய்வமாகிய திருவேங்கடவனுக்குப் பிரம்மாவினால் எடுக்கப்படும் உத்ஸவத்திற்கு பிரம்மோத்ஸவம் என்று பெயர். உத்ஸவம் என்றால் உயர்ந்த என்று பொருள். சகல தேவர்களும் திரண்டு வந்து எம்பெருமானைத் தொழ, பிரம்மாவின் தலைமையில் மிகவும் சிறந்த முறையிலே கொண்டாடப்படுவதால் இவ் உத்ஸவத்திற்கு பெருமையும் மகிமையும் கூடுதல் என்பது கண்கூடு. திருமலையில் வருடாவருடம் புரட்டாசி மாதத்தில் மலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறுகின்ற பிரம்மோத்ஸவம் போன்றே, ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் கார்த்திகை



மாதத்தில் வருடாந்திர பிரம்மோத்ஸவம் ஒன்பது நாட்கள் மிகவும் விமரிசையாகவும் பக்தி சிரத்தையுடனும் ஆகம சாஸ்த்திரப்படி திருச்சானூரில் நடைபெறுகிறது.

துவஜாரோஹணம் எனப்படும் கொடியேற்றத்துடன் பிரம் மோத்ஸவம் தொடங்கப்படும். இக்கொடியேற்றத்தின் குறியீடு என்னவென்றால், சகல தேவர்களையும் நிகழும் உத்ஸவத்திற்கு அழைப்பு விடுப்பது போன்றதாகும். இவ்வாறு தொடங்கி ஒன்பது நாட்களும் விதவிதமான வாகனங்களில் திருஅலங்காரத்தோடு தாயார் மாட வீதிகளில் தினமும் காலையும் மாலையும் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் புரிகின்றார். பிரம்மோத்ஸவத்தின் கடைசி நாளான ஒன்பதாம் நாள் இவ்வுத்ஸவத்திற்கு மணிமுடி யாய் திகழும் தீர்த்தவாரி உத்ஸவம் நடைபெறும். இந்த தீர்த்த வாரி உத்ஸவம், பெரும்பாலும் மக்களிடையே பஞ்சமி தீர்த்தம் என்றே வழங்கப்படுகிறது.

திருச்சானூரில் பத்மசரோவரத்தில் நடைபெறும் தீர்த்தவாரி உத்ஸவத்தின் மகிமை சொல்லிமாளாது. அத்துணை சிறப்பும் பெருமையும் உடையது. ஸ்ரீபத்மாவதி தாயார் அவதரித்த திருநாளான கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமியில் உத்ஸவம் நடைபெறுவதும், கலியுக கண்கண்ட தெய்வமான எம்பெருமான் ஸ்ரீநிவாசப் பெருமாள் தவம் செய்த புண்ணியத் திருத்தலம் இத் திருச்சானூர் என்பதும் மட்டுமல்லாது, எம்பெருமான் முயற்சி யால் இத்திருக்குளம் உண்டாக்கப்பட்டது. மேலும், இத்திருக் குளத்தில் நட்டப்பட்ட பொற்றாமரை மலர்க்கொடி இந்திர லோகத் திலிருந்து வாயு தேவனால் கொண்டு வரப்பட்டதுமாகும். பன்னி ரண்டு ஆண்டுகள் தவப்பயனாய், பிரிந்திருந்த திருமகளை எம்பெருமான் தன் திருமார்பில் அரவணைத்துக் கொண்ட திருத்தலமும் ஆகும்.

**சீரும் சிறப்பும் :**

பஞ்சமி தீர்த்தத்தன்று, திருமகளின் கேள்வனான திருவேங் கடமுடையான் தன் பத்தினியான ஸ்ரீபத்மாவதி தேவிக்கு ஆவிர்பவ தின சீராகப் பட்டுப்புடவை, மஞ்சள், குங்குமம், திவ்யாபரணங் கள், தாம்பூலம் இவற்றோடு லட்டு, வடை, அப்பம் போன்ற பிரசா தங்களை திருமலையிலிருந்து அனுப்பி வைக்கிறார். இச்சீரினை திருமலை திருப்பதி தேவஸ்தான உயர் அதிகாரிகளும் அர்ச்சகர் களும் வேதபண்டிதர்களும் மிகவும் பக்தி பாவனையோடு தங்கள் சிரத்தின் மீது தாங்கியவாறு திருமலையிலிருந்து கீழே திருப் பதிக்கு எடுத்து வர, திருப்பதி திருக்கோயில்களின் உயர் அதிகாரி கள் மிகவும் பணிவோடும் மேளத்தாளங்களோடு எதிர் சென்று அழைத்து வந்து மரியாதை செய்கின்றனர். பின்பு அலங்கரிக்கப் பட்ட யானைகள் முன்னே செல்ல, மேளதாளங்களோடு அனை

வரும் திருச்சானூரை நோக்கிப் புறப்படுகின்றனர். இவர்களை திருச்சானூர் திருக்கோயிலின் அதிகாரிகளும் வேத பண்டிதர்களும் குழாமாகச் சென்று வரவேற்று மகிழ்வதோடு, திருமாட வீதிகளில் வலம் வந்து அவர்கள் கொண்டு வந்த அத்தனை சீர் வரிசைகளும் தாயாரின் திருமுன்பு சமர்ப்பிக்கப்படுகின்றது. தன் கேள்வனான திருவேங்கடவனிடமிருந்து வந்த சீர்வரிசைகளைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கோடு தாயார் பஞ்சமி தீர்த்தவாரிக்கு பத்மசரோவரத்திற்குப் புறப்படுகிறாள்.

பத்மசரோவரத்துக்கு எழுந்தருளிய தாயாருக்கும் சக்கரத்தாழ்வாருக்கும் வேதபண்டிதர்கள் வேத பாராயணம் செய்த வண்ணமிருக்க, மங்கள பொருட்களால் திருமஞ்சனம் மிகச் சிறப்பாக நடைபெறும். பின்பு சக்கரத்தாழ்வாரை புஷ்கரிணிக்குள் எழுந்தருளப் பண்ணி சக்கரஸ்நானம் மிக விமரிசையாக நடைபெறும். இத்திருக்காட்சியைக் கண்ணுறும் பக்தர்கள் உள்ளத்தில் பக்தி பாவனை உண்டாகி பரவசமடைகிறார்கள். அப்பொழுது பக்தர்கள் திருமலையப்பனாகிய ஸ்ரீநிவாசனையும், ஸ்ரீபத்மாவதி தாயாரையும் தங்கள் மனதில் நினைத்த வண்ணம் "கோவிந்தா, கோவிந்தா" என்று கோஷித்தப்படி புஷ்கரிணியில் இறங்கி மூழ்கி தீர்த்த நீராடி பிறவிப் பெரும் பயன் பெற்றதாக எண்ணி மகிழ்கின்றனர்.

டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர், 96766 95443

# பஞ்சமி தீர்த்தத்தின் மகிமை



**திவ்விய க்ஷேத்திரங்கள் பல உண்டு. அவைகளுள் சில க்ஷேத்திரங்கள் அங்கிருக்கும் தெய்வத்திற்குப் பெருமை கூட்டுவதாகவும், சில க்ஷேத்திரங்கள் அங்கிருக்கும் தீர்த்தத்திற்குப் பெருமை சேர்ப்பவையாகவும் இருக்கும். ஆனால், திருச்சானூர் திவ்விய திருத்தலத்தில் இவ்விரண்டிற்கும் பெருமையும் மகிமையும் சேர்ந்திருப்பது சிறப்பு.**

**மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறிந்தோ அறியாமலோ தவறுகள் செய்து, அதன் வாயிலாக பாபங்களைத்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். அப்பாவங்கள் நம் வாழ்வை சீர்க்குலைத்து நம்மை துன்பக் கடலில் தள்ளி விடுகிறது. அதனால், மனிதன் எப்பொழுதும் சோகத்தில் இருப்பவனாகிறான். இது இன்று நேற்று அல்ல யுகயுகங்களாக நடைபெற்று வரும் ஒரு தொடர் நிகழ்ச்சியே ஆகும். இருப்பினும், மக்கள் தன் பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக வேண்டி, ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு விதமான முறைகளைக் கடைபிடித்து வந்துள்ளனர். அவ்வகையில் கிருத யுகத்தில் தவமியற்றியும், திரேதாயுகத்தில் வேள்விகள் பல செய்தும், துவாபர யுகத்தில் தான தர்மங்கள் புரிந்தும், இறைவனின் அடி நீழலிலிருந்தும் ஆறுதல் அடைந்துள்ளனர். இக்கலியுகத்தில் பாவப்பட்ட மனிதர்களின் பாவங்களைப் போக்க, நாராயணனின் நாம பாராயணம் செய்வதும், புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுவதும் ஆகும். அனைத்து புண்ணிய தீர்த்தங்களுக்கும் சென்று நீராடுவது பலருக்கும் அரிதாகும்.**


**எனவே, பஞ்சமி தினத்தன்று பத்மசரோவர புஷ்கரிணியில் மூழ்கி நீராடினால், புண்ணிய நதிகள் அத்துணையிலும் நீராடிய புண்ணியம் வந்து சேரும் என்பது நம்பிக்கை. இதற்குக் காரணம் பஞ்சமி தினத்தன்று சப்த நதிகளும் தாயாரை தரிசிப்பதற்காகப் பத்ம சரோவரத்தில் கூடுவதாக ஐதீகம். இத்திவ்விய திருநாளன்று பத்மாவதி தேவியை சேவித்து, திருவடித் தாமரையில் சரண் புகுவோம். பிறவிப் பெருங்கடல் நீந்துவோமாக.**

# மஹாலக்ஷ்மியின் மஹிமை

அளவற்ற மஹாலக்ஷ்மியின் மகிமைகளில், சுவையான சில துளிகளை பார்ப்போம். பூவுலகில் அதுவும் பரத கண்டத்திலேயே மூன்று மகான்கள் தாயாரை துதி செய்து, பொன்மழை பொழியச் செய்தனர்.


கேரள மாநிலத்தில் நடந்த உண்மை சம்பவம் இது. ஆதிசங்கரர் சிறிய பாலகன். உபநயனம் முடிந்து பிக்ஷை ஏற்று வாழ துவங்கிய காலம். ஒரு வீட்டின் முன் நின்றான். கூரைவீடு. அந்த வீட்டு பிராமணன் பெயர் அயாசகன். அன்று துவாதசி திதி. முதல் நாள் ஏகாதசி அன்று முழு பட்டினி கிடந்து, பின் மறுநாளான துவாதசி அன்று பாரணை செய்ய வேண்டிய நியமம். அந்த வீட்டில் வறுமை தாண்டவம் ஆடுகிறது. வாசலில் வந்து நிற்கிறான் தேஜசுடன் பூணூல் அணிந்து பிராமண நியமப்படி பிக்ஷை எடுத்து உண்ண வேண்டிய இளம் பாலகனாகிய சங்கரன். “பிக்ஷாம் தேஹி... பிக்ஷாம் தேஹி.. பிக்ஷாம் தேஹி...” குரலை கேட்டு வாசலில் வந்து பார்க்கிறாள் அந்த பிராமணனின் மனைவி. கிழிந்த உடை. வறுமையின் ஆழமான தாக்கத்தை பறைசாற்றியபடி கூனி குறுகி நிற்கிறாள். ஒரு கைப்பிடி அரிசி கூட இல்லாத கொடுமையான வறுமை. ஆனால் வைதீக நியமப்படி ஏகாதசி உபவாசம் இருந்த பின் துவாதசியன்று காலையிலேயே ஏதாவது உணவு அவசியம் சாப்பிட வேண்டும். தங்கள் குடும்பமே பட்டினி. துவாதசி பாரணைக்கு என்று எதுவுமே கிடைக்கவில்லை. வாசலிலோ பிக்ஷை கேட்டு நிற்கும் இளம் பாலகன் வருந்தினாள். துவண்டாள்.மாடத்தில் ஒரே ஒரு நெல்லிக்கனி இருந்தது. அது துவாதசி பாரணைக்கு உதவும். பசி என்று கேட்டு வாயிலில் நிற்கும் பாலகனை விட துவாதசி பாரணை பெரிதல்ல. துவாதசி பாரணை துவங்காததால் வருகின்ற பாவம் வரட்டும். முதலில் பாலகனுக்கு இதை இடுவோம் என்று நினைத்தாள். காய்ந்த நெல்லிக் கனியை கையில் எடுத்துக் கொண்டு கிழிந்த புடவை தனை சரி செய்த வண்ணம் தன்னால் பாலகனின் பசிக்கு உருப்படியாக ஏதும் கொடுக்க இயலவில்லையே என்று வெட்கம் கொண்டு அந்த நெல்லிக்கனியை மட்டும் பாலகனின் பிக்ஷா பாத்திரத்தில் இட்டாள். சங்கரன் பார்க்கிறான். நெல்லிக்கனியை மட்டும் அல்ல. அதை பிக்ஷா பாத்திரத்தில் இட்ட ஸ்திரீயை பார்த்தான். அவளது ஓட்டை வீட்டைக் கண்டான். வறுமையையும் கண்டான். ஸ்திரீயின் மனதில் பிரவாகமாக ஓடும் வளமான உணர்ச்சிகளையும் மனக்கண்ணில் கண்டான். சிந்தித்தான். செல்வத்திற்கு அதிபதி யார்? சாக்ஷாத் மஹாலக்ஷ்மி! மஹாலக்ஷ்மியினால்





அருளப்படும் செல்வத்தை விட உயர்ந்த செல்வம் வறுமை நிலையிலும் கொடுக்க வேண்டும் என்று நினைத்த மனம் அல்லவா? இந்த ஜென்மத்திலோ அல்லது பூர்வ ஜென்மத்திலோ எப்போதோ செய்த கர்ம வினை தான் இவர்களுக்கு கிட்டியுள்ள வறுமை என்று வாழ்க்கையின் கர்ம பலன்களை விளக்கலாம். ஆனால், வறுமையிலும் கொடுக்க வேண்டும் என்று நினைத்த மாத்திரத்திலேயே கொடுமையான கர்ம வினைகள் அனைத்தும் நசிந்து விடாதா. இந்த உத்தமமான பிறவிக்கு உன் கடைக்கண் பார்வை திரும்பாதா என்று சீரிய பிரார்த்தனையுடன் பாலகனின் வாயினில் இருந்து பிரவாகமாகப் புறப்படுகிறது.... *''அங்கம் ஹரே புலக பூஷணமாஸ்ர யந்தீ...''* என்று துவங்கும் கனக தாராஸ்தவம். பாடி முடித்தத் தருணத்திலேயே அந்த வீடு முழுவதும் "தங்க நெல்லிக் கனிகள்'' தாரையாக (மழையாக) வீழ்கின்றன.

விஜய நகர சாம்ராஜ்ஜியம் நிறுவப்பட்ட வீர வரலாற்றினை நினைவு கொள்வோம். அதற்கு ஆதாரமாக வித்திட்ட மஹான் வித்யாரண்யர் எனப்படும் ஓர் தவ வாழ்க்கை கொண்ட சந்நியாசி. சந்நியாசம் மேற்கொண்ட பின் அறியப்பட்ட திருநாமம் இது. அதற்கு முன் அவரது பெயர் சரியாக அறியப்படவில்லை. பிரம்மசாரி வாழ்க்கை. இளமையில் வறுமை. இதென்ன வாழ்க்கை. மனம் நொந்தார். சிந்தித்தார். வறுமை நீங்கி செல்வம் பெற விடை கிடைத்தது. பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் மார்பினில் வீற்றிருக்கும் இணையில்லாத திருமகள், அலை மகள், அன்னை மஹாலக்ஷ்மியின் கருணை ஒன்றே விரும்பிய செல்வத்தை கொடுக்கும் என உணர்ந்தார். துங்கபத்திரா நதி அருகே கடுமையான தவத்தினை மேற்கொண்டார். உடல் துவண்டது. உள்ளம் நிலையாக இருந்தது. திருமகளின் திவ்ய தரிசனம் கிடைத்தது. வேண்டிய செல்வத்தினை அருள வரம் கேட்டார். அந்தோ பரிதாபம் அன்னையின் அருள் வாக்கினில் நிலை குலைந்தார். "உனக்கு இப்பிறவியில் வறுமை மட்டுமே. இது உனது கர்ம வினை. அடுத்த பிறவியில் அரிய செல்வம் பெறுவாய். ஸ்வர்ணம் புரளும் பூமி உனக்கு கிட்டும். காத்திரு அடுத்த பிறவிக்கு'' என்ற தேவியின் தீர்ப்பினை கண்டு சிந்தித்தார். உடன் ஒரு தீர்மானம் மனதில் நிலை பெற்றது. "தாயே சந்நியாசம் கொண்டால் அது மறு பிறவிதானே. இந்த க்ஷணமே ஏற்றுக் கொள்கிறேன்'' என்கிறார். அன்னையின் அருள்வாக்கு தொடர்ந்தது.



"அவ்வாறே அளித்தேன். நீ பார்க்கும் இடம் எல்லாம் தேடும் இடம் எல்லாம் தங்கக் குவியலே யாகும். ஆனால், என்ன தாயே! அதிர்ந்து போன நொடி அது! சந்நியாசிக்கு துரும்பும் சொந்தமில்லை". அருள் சுரந்து மறைந்தாள் அன்னை மஹாலக்ஷ்மி. அந்த க்ஷணமே பிரம்மசாரி சந்நியாசி ஆனார். திரும்பிய இடமெல்லாம் அன்னையின் வாக்கு பலித்தது. அரிய தங்கக் குவியல் கிட்டியது. தவ வாழ்க்கையில் தனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. ஆனால், தர்ம சாஸ்த்திரப்படி அணுவளவு செல்வம் கூட அவருக்கு பாத்தியதை கிடையாது. துங்கபத்திரா நதிக்கரையில் நின்ற இரண்டு குறும்பர்களை (யாதவர்கள் போல் ஒரு நல்ல கலாச்சாரம் உள்ள இன மக்கள்) கண்டார். அவ்விரு இளைஞர்களை கொண்டு ஓர் அற்புதம் செய்தார். மாலிக்காபூர் என்ற இஸ்லாமிய கொடுங் கோலன் படையெடுத்தபோது மூர்க்கத்தனமாக அழிக் கப்பட்ட பல ஆலயங்களை புனர் நிர்மானம் செய்து விஜய நகர சாம்ராஜ்யத்தை நிறுவினார். அந்த இரு இளைஞர்கள் தான், வரலாற்றில் ஹரிஹரர், புக்கர் என்று அழைக்கப்பட்ட தீரர்கள்.

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தின் வரலாற்றினில் ஒளிரும் முத்திரை பதித்த ஒரு மஹான் ஸ்ரீவேதாந்த தேசிகர். வேத உபநிஷதங்களில் கரை கண்ட ஞானி ஆனதால் "நிகமாந்த மஹா தேசிகர்" என்றும் அறியப் படுவார். காஞ்சிபுரம் அருகே தூப்புல் என்ற க்ஷேத்ரத்தில் வாழ்ந்து வந்தார்.

இவர் மஹாலக்ஷ்மியின் அருட் கடாக்ஷம் பெற்ற தோர் அற்புத நிகழ்வை பார்ப்போம். இவர் மீது காழ்ப் புணர்ச்சி கொண்ட கும்பல் ஒன்று! இவரை எப்படியா வது சமுதாயத்தில் ஏளனப்படுத்தி, கேலி பேசி, இவரது பெருமையை குலைத்திட வேண்டும் என்று நினைத்தது. ஒரு சதி உருவானது. கொடிய வறுமையில் வாழும் ஒரு அந்தண இளைஞன் படிப்பறிவற்ற அசட்டு தோற்றம். இந்த இளைஞனை வேதாந்த தேசிகரிடம் அழைத்து வந்தனர் அவருடைய விரோதிகள், "ஸ்வாமி தாங்கள்

**மணமான பெண்களின் சிரத்தின் மீது உள்ள நடு வகிட்டில் மஹாலக்ஷ்மி உறைகிறாள். அதனால் சிகை அலங்காரம் செய்தபின், நடு வகிட்டில், குங்குமம் வைத்துக் கொள்கிறார்கள். திருமணமான பெண்கள் தங்களது மாங்கல்யம் நிலைப்பதற்காக, தங்களது கணவன்மார்கள் தீர்க்காயுளோடு வாழ வேண்டி, கடக/சிம்ம மாதங்களில் வரும், குறிப்பிட்ட வெள்ளிக்கிழமைகளில், மிகுந்த பய பக்தியுடன், "வரலக்ஷ்மி விரதம்" இருந்து பூஜை செய்வது, பல குடும்பங்களின் பரம்பரை வழக்கம். பூர்ண கும்பம், மஞ்சள் குங்குமம், திருமண் சூர்ணம், அரிசி மாவினால் இடப்பட்ட கோலம், சந்தனம், மாவிலை, வாழை, தாம்பூலம், திருவிளக்கு, தீபம், பசுவின் பின்பக்கம், உள்ளங்கை இவை அனைத்தும் மஹாலக்ஷ்மி நித்ய வாசம் செய்யும் மங்களம் நிறைந்த பொருட்களாக கையாளப்படுகின்றன.**

## லக்ஷ்மி வாசம் செய்யும் பொருட்கள்



சிறந்த ஞானி. இந்த வறுமையில் உழலும் இளைஞனுக்கு நல்வாழ்வு வேண்டும். ஒரு உத்தமமான பெண் திருமணம் செய்து கொள்ள வேண்டும். செல்வம் இன்றி தரித்திரத் தில் வாழும் இவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள். தாங்களோ தபோ பலம் உடைய “ஸர்வதந்திர ஸ்வதந்திரர்” என்ற புகழ் மிக்கவர். இவனுக்கு தாங்கள் தான் செல்வத்தை அளித்து திருமணம் நடக்க அனுக்ரகம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

சத்தியமான ஸ்ரீவைஷ்ணவனுக்கு, பகைவன் என்று யாருமே கிடையாது என்ற ஞானம் உள்ள தேசிகர் அவர்களது கோரிக்கைக்கு இணங்கி, வறுமையில் வாடும் அந்த இளைஞனும் மணவாழ்க்கை கொள்ள முடிவு செய்தார். அவர்கள் அனைவரையும் மறுநாள் காலை “பெருந்தேவி தாயார்” என்ற மஹாலக்ஷ்மியின் ஆலயத்திற்கு வரும்படி பணித்தார். மனம் உருக, மஹாலக்ஷ்மியின் மீது அரிதான ஒரு ஸ்துதியை செய்தார். அதுவே 25 சுலோகங்கள் கொண்ட “ஸ்ரீஸ்துதி” என்று புகழ் கொண்டது. ஸ்தோத்திரம் பாடி முடித்ததும், அந்த அதிசயம் நிகழ்ந்தது. ஸ்வர்ண மழை போன்று தாரையாக பொற்காசுகள் அவரது பாத கமலங்கள் முன் வீழ்ந்தன. தேசிகர் “ஸர்வதந்திர ஸ்வதந்திரர்” என்று மஹாலக்ஷ்மியின் கருணை நிரூபித்தது. வெட்கி நிலை குலைந்தனர் அவரது விரோதிகள். அவரை அண்டிய வறுமை நிறைந்த இளைஞனிடம் பொற்குவியலை அளித்து அவனை வாழ வைத்தார். இன்றும் ஸ்ரீவைஷ்ணவர்களால், இந்த “ஸ்ரீஸ்துதி” ஸ்தோத்திரம், பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. தவிர லக்ஷ்மி குபேர பூஜையிலும் இடம் பெற்று வருகிறது.

இதிஹாஸமயம் வீ.சீதாராமன், சென்னை,
9894526302





## “ஸ்ரீ” ஸூக்தம்

**நிகமாந்த மஹா தேசிகன் தான் செய்த “ஸ்ரீஸ்துதி” ஸ்தோத்திரத்தில், மங்களமான அனைத்து படைப்புக்களிலும் முதன்மையான மங்களமாக ஜ்வலிப்பது மஹாலக்ஷ்மிதான் என்கிறார். ரிக் வேதத்தில் காணப்படும் 15 ரிக்குகளை கொண்ட “ஸ்ரீ ஸூக்தம்” எனப்படும் பகுதி, மஹாலக்ஷ்மியின் பரிபூர்ண அருளைப் பெற்றிடும், மிகுந்த சக்தி வாய்ந்ததொரு பிரயோகமாக, வேதம் பயின்ற வல்லுநர்களால், அக்ஷர சுத்தத்தோடு கட்டுப்பாடோடு ஓதப்பட்டு வருகிறது. பிருகு மகரிஷிக்கும் அவரது மனைவி கியாதிக்கும் மகளாக ஓர் அவதாரம் செய்கிறாள் மஹாலக்ஷ்மி. அதனால் பார்கவி என்று பெயர் பெறுகிறாள். செல்வம், ஞானம், மன உறுதி, வீரம், புகழ், புத்ர சந்தானம் (நன்மக்கட்பேறு), பசிக்கு உணவு, மனிதப் பிறவியின் ஆற்றல் எனப்படும் எட்டு வித ஐச்வர்யங்களையும் அடைவதற்கு மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபத்தை அஷ்டலக்ஷ்மிகளாக வழிபடுதல் ப்ரத்யக்ஷமான பலனைக் கொடுக்கும் என்பது மஹான்களின் பல ஆசார்யர்களின் உபதேசமாகும்.**







# "ஸ்ரீ" ஸ்தவம்

பேராசிரியர்
எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி,
94434 39963

வேதத்தின் மிக முக்கியமான ஸ்ரீசூக்தத்தின் ஸாரத்தை இழைத்தும், குழைத்தும், தொகுத்தும் ஸ்ரீ ஸ்தவத்தில் கூரத்தாழ்வான் பிராட்டியின் பெருமையை பாடியிருக்கிறார். இதில் 11 சுலோகங்கள் இருக்கின்றன. இதில் முதல் சுலோகத்தில் அவர் பிராட்டியின் வைப வத்தை குறித்து விரிவாக விளக்குகின்றார்.

பகவான் நாராயணன் உலகில் படைத்தல், அழித் தல் மற்றும் காத்தல் என்று காரியங்களைச் செய்கின் றான். இக்காரியங்களை அவன் தன்னுடைய விருப்பத் தின்படி செய்வதில்லை. அக்காரியத்தைச் செய்வதற்கு முன் பிராட்டியின் அழகான முகத்தைப் பார்க்கின்றான். அவள் கண்கள் காட்டும் குறிப்பை நோக்குகிறான். அக் குறிப்பு இணக்கத்திலேயே பகவான் இவைகளைச் செய்கிறான். பிராட்டியின் கண்கள் போகின்ற திசை யெல்லாம் எம்பெருமானின் செயல்கள் போகின்றன என்பதை சொல்லும் சுலோகத்தின் அமைப்பு அற்புத மானது.

*''யஸ்யா வீக்ஷ்ய முகம்*
*ததந்கிதபராதீனோ விதத்தே*
*சகிலம் கிரீடேயம் கலு நான்ய*
*தாசஸ்ய ரஸதா ஸ்யாதை*
*கரஸ்யாத்தயா''*

பகவானை தன்னுடைய விருப் பத்தின்படி செய்ய வைக்கும் சக்தியுடையவள் பிராட்டி. எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் அகலகில் லேன் இறையும் என்று பகவானை அகலாமல் இருப் பவள் பிராட்டி. பகவான் செல்வம் உடையவனாக இருப்பதற்கு காரணம் இவள். எனவேதான் அவனுக்கு *''ச்ரிய: பதி''* என்று பெயர். இப்படி பகவானுடன் எப்போதும் சேர்ந்தே இருக்கிற விஷ்ணு பத்னியாகிய பிராட்டியே! அடியேனுக்கு மிகுந்த பக்தியும், ஞானமும் அளித்து என்னைக் காப்பாயாக!" என்று இந்தச் சுலோகத்தில் பிரார்த்திக்கிறார்.

கூரத்தாழ்வான் நிலையற்ற செல்வத்தை பிரார்த்திக் கவில்லை. நிலையான செல்வங்களாகிய பக்தியையும், அதனால் விளைகின்ற ஞானத்தையும் கொடுத்து என்னை உய்விக்க வேண்டும் என்று கேட்கிறார்.

இரண்டாவது சுலோகத்தில் பிராட்டியை கம்பீரமாக ஸ்ரீதேவி என்று அழைக்கின்றார். "அம்மா!நீ எல்லா உலகுக்கும் தாயல்லவா! உன் பெருமை உனக்கும் தெரி யாது! உன்னை அடைந்த எம்பெருமானுக்கும் தெரியாது! உன்னைப் பாடுவதற்குத் திறன் பெற்ற ஒரு மொழி இன்னம் ஏற்பட வில்லை. இப்போதுள்ள மொழிகளால் எல்லை யற்ற உன் பெருமையைப் பாட முடியாது."

ம்...ஏதோ ஒரு நிலையில் உன்னைப் புகழ்ந்து பாடவேண்டும் என்று சொன்னால், அதற்கான தகுதியை நீயே என்னுடைய நாக் கில் நிற்கும் வாக்கிற்கும் அவ்வாக்கு பரிணமிக்கும் ஞானத்திற்கும் அன் போடு அருள் செய்தால்தான் உண்டு.



**பகவான் சரணம் என்று தனது தாள் அடைந்தவரை மட்டுமே இரட்சிப்பான். ஆனால் நீ அவனை விட மேம்பட்டவள் அல்லவா! இலங்கையில் எத்தனையோ அரக்கிகள் உன்னைக் கொடுமை செய்தார்கள். அவர்கள் யாரும் உன்னுடைய திருவடிகளில் சரணம் என்று சரணாகதி அடையவில்லை. ஆயினும் அவர்களுக்கு ஆபத்து வந்தபோது நீ அல்லவா அவர்களைக் காத்தருளினாய்.**



"அம்மா.... என்னுடைய பக்தியானது தினம் தினம் உன்னுடைய அருளால் வளர்ந்து பரமபக்தியாக மாறவேண்டும். தாயே! நான் வேறு எதையும் எதிர்பார்க்க வில்லை! உன்னுடைய திருவடித் தாமரையில் சரணடைய வேண்டும். உனக்கு என்றென்றும் தொண்டு புரிய வேண்டும்! என்னுடைய இந்த கோரிக்கையை நீ ஏற்றுக் கொண்டால், நான் மிகுந்த ஆனந்தம் கொள்வேன்."

"தாயே! உன்னுடைய விழிகள் கருணை பொங்கும் விழிகள்! அந்த விழிகளின் பார்வையை சற்றே எங்கள் மீது திருப்பி அருள வேண்டும்." இச்சுலோகத்தைத் துவங்குகிற போது, ***"ஹே ஶ்ரீர் தேவி சமஸ்த லோக ஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹா மஹே"*** என்று துவங்குகிறார். இதையே ஆளவந்தார் தமது சதுஸ்லோகியில் ***"லோகைகேச்வரி லோகநாத தயிதே தாந்தே தயாம் தே விதந்"*** என்று போற்றுகின்றார். ஸ்ரீ ராமாநுஜரும் ***"தேவ தேவ திவ்யமகிஷியும் அகில ஜகன்மாதரம் அஸ்மிந் மாதரம்"*** என்று போற்றுகின்றார். பிராட்டியின் பெருமையை யாராலும் பாட முடியாது என்று சொல்லும் கூரத்தாழ்வான் ஒரு படி மேலே போய் வாக்குக்கு அதிபதியாக விளங்கக்கூடிய ஹயக்கிரீவரால் கூட பாட முடியாது என்கிறார்.

பொதுவாகவே பாடுவதில் இரண்டு வகை உண்டு. இருக்கின்ற குணத்தை உள்ளபடியே பாடுவது. இல்லாததை இருப்பதாகப் புகழ்ந்து பாடுவது. ஆனால் பிராட்டி விஷயத்தில் இப்படிப்பட்ட கவிதா விலாசம் எல்லாம் செல்லுபடியாகாது. காரணம் அவளிடத்தில் இருக்கக்கூடிய குணங்களை யாரும் பட்டியலிட முடியாது. இல்லாததை இருக்கிறது என்று சொல்வதற்கும் முடியாது. ஏதாவது இல்லாமல் இருந்தால் அல்லவா அந்தக் குணத்தைச் சொல்லி, அது இவளிடம் இருக்கிறது என்று ஏற்றிச் சொல்லலாம். அப்படி எதுவுமே "இல்லாததே" இல்லாத போது, கவித்துவமாக, அவளுடைய குணங்களை, சாமர்த்தியமாக பாடுவது என்பது யாராலும் முடியாது. ஏதோ அவளுடைய கருணை இருந்தால், கொஞ்சமாவது அவளைப்பற்றி பாடமுடியும்.

ஆயினும் கூரத்தாழ்வான் இச்சுலோகத்தில் சொல்லுகின்றார். "உன்னுடைய பெருமையையும் கல்யாண குணங்களையும் என்னுடைய உண்மையான நாக்காலும் அல்லது வாக்காலும் சொல்ல முடியாது. ஆயினும் ஆற்றலும் தகுதியும் இல்லாத என் மனது, உன்னைப் பாட முடியவில்லையே என்று தவிக்கிறது. என்னுடைய வாக்கு துடிக்கிறது. ஆனாலும், என்னால் முழுமையாக சொல்ல முடியாமல் திருப்தி யற்ற நிலையிலேயே இருக்கிறேன்." அது தான் உன்னால் முடியவில்லையே... பின் ஏன் வீணாக இந்த முயற்சி செய்கிறாய் என்று கேட்கலாம்.

சகோரி என்றொரு பறவை இருக்கிறது. அது சந்திரகலை இருக்குமா என்று கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருக்குமாம். சந்திரனின் குளிர் கதிர்களை உணவு என்று எண்ணிப் பருகுமாம். இதில் அது அடைகின்ற லாபம் எதுவும் இல்லை. ஆயினும் முடியாத அந்த விஷயத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறது. அதுபோல் உன்னுடைய குணங்களைப் பாடுகின்ற ஆற்றல் என்னுடைய நாக்குக்கும் வாக்குக்கும் இல்லாது போனாலும் உன்னுடைய குணங்கள் அனைத்தையும் பாடித் துதித்துக் கொண்டே இருப்பேன். காரணம் வேறு ஒன்றும் இல்லை தாயே. உன்னைப் போற்றிப் பாடாமல் என்னால் இருக்க முடியவில்லையே. என்ன செய்வேன் என்று புலம்புகின்றார்.

அடுத்த சுலோகத்தில் அவர் பிராட்டியிடம் தன்னுடைய அச்சத்தை வெளிப்படுத்துகின்றார். "அம்மா! மகாலட்சுமி தாயே! உன்னைப் போற்றிப் பாடுவதற்கு எனக்கு அறிவு இல்லை! அனுஷ்டானங்களும் இல்லை! ஞானம் அனுஷ்

டானம் இவை இரண்டும் பக்தியின் இலக்கணங்கள் அல்லவா! அவை இரண்டுமே என்னிடத்திலே இல்லை! ஆயினும் என்னுடைய புன்மையான மொழிகளால் உன்னை ஆற்றாமையோடு போற்றிப் பாடுகின்றேன்! அதனால் உன்னுடைய புனிதத்துவம் குறைந்து விடாது!" இப்படி சொல்லிவிட்டு இதற்கு ஒரு உவமையையும் கூரத்தாழ்வான் சொல்லுகின்றார். புனிதமான கங்கை ஓடுகின்றது. அதில் பல புண்ணியர்கள் நீராடுகிறார்கள். அதே கங்கையிலே எத்தனையோ குப்பைகளும் தூய்மையற்ற பொருள்களும் மிதந்து போகின்றன. சாதுக்கள் நீராடும் அதே கங்கையில் தாகத்தால் தவித்த நாயொன்று வாய் வைத்து தண்ணீர் பருகுகிறது. அதனால் கங்கைக்கு குற்றம் வந்து விட்டதா என்ன? அந்த நாயின் தாகத்தையும் தீர்த்த பெருமை அல்லவா கங்கைக்கு கிடைக்கிறது. "அந்த நாயைப் போன்ற நான் கங்கை போன்ற உன்னை என் தாகத்தால் புகழ்ந்து பாடுவதை நீ ஏற்க மாட்டாயா என்ன?"

உன்னுடைய பெருமையும் பொறுமையும் எனக்குத் தெரியும். எப்பேர்பட்ட தீயவர்களையும் திருத்த வேண்டும் என நினைப்பவள் நீ. எத்தனை முயன்றும் திருத்த முடியாத இராவணனை நீ எத்தனை பொறுமையாக பல மொழிகளைக் கூறித் திருத்த முயன்றாய்.

கூரத்தாழ்வான் செல்வம் குறித்த ஒரு விளக்கத்தையும் அருள்கிறார். இரண்டு வகையான செல்வங்கள்அவளுடைய கருணையின் விளைவாகக் கிடைக்கப் பெறுகின்றன என்பதை பின்வரும் சுலோகத்தில் மிக அழகாகச் சொல்லுகின்றார். *''ஐஸ்வர்யம் மஹதேவ வால்பமதவா த்ருஸ்யேத பும்ஸாம் ஹி யத் தல்லக்ஷ்ம்யா: ஸமுதீக்ஷணாத்வ யதஸ் ஸார்வத்ரிகம் வர்ததே''* இது சாதாரண ஒருவனுக்குக் கிடைக்கக் கூடியது. அதனால் மகாலட்சுமியின் அருளால் எனக்கு இவ்வுலக செல்வமும் அவ்வுலகச் செல்வமும் கிட்டியது என்று சந்தோஷப்படலாம். ஆனால் பிராட்டியின் கருணையால் தனக்கும் திருமால் என்கிற பட்டமும் ஆனந்தமும் கிடைத்தது; தான் வெறும் நாராயணன் அல்ல திருநாரணன் ஆகினேன் என்று எம்பெருமானே சந்தோஷப்படுகிறானே... இதை சுலோகத்தில் எப்படிச் சொல்லுகிறார் தெரியுமா?

*''தேனைநதேந ந விஸ்ம யேமஹி ஜகந்நாதோபி நாராயண: தந்யம் மந்யத ஈக்ஷணாத்தவ யதஸ் ஸ்வாத்மாநமாத்மேஸ்வர:''* அடுத்து பிராட்டியின் பெருமையைப் பேசுவதற்காக வாமன அவதார நிகழ்ச்சியை எடுக்கிறார் கூரத்தாழ்வான். வாமன அவதாரத்தில் எம்பெருமான், தன்னுடைய பக்தனான பிரகலாதனின் பேரன் மகாபலியிடம் சென்று இந்திரனுக்காக மூன்றடி மண் கேட்கிறார். அதுவும் *''என் காலடியால் யான் அளப்ப மூவடி மண் தருக''* என்று கேட்கும்போது தன்னுடைய மார்பை மான் தோலால் மூடிக்கொண்டு சென்றானாம்.

இதில் இரண்டு நுட்பங்கள் சொல்லப்படுகின்றன. பிராட்டியை அழைத்துச் சென்றதற்கு காரணம் "சிறிது நேரமும் விட்டுப் பிரியேன்" என்று பெரிய பிராட்டியார் நித்தியவாசம் செய்கின்ற திருமார்பினையுடையவன் என்பதால்! அதேசமயம் பிராட்டியை தன்னுடைய மேலங்கியால் மறைத்துக் கொண்டு சென்றதற்குக் காரணம், ஒருவேளை அவள் பார்வை பட்டால் மகாபலியிடம் இப்பொழுது உள்ள செல்வத்தை விட பெரும் செல்வம் சேருமே தவிர அவருடைய பதவியையோ செல்வத்தையோ தன்னால் வாங்க முடியாது அல்லவா.அதனால் இவ்விடத்தில் ஸ்ரீ காஞ்சி

**செல்வங்களில் இரண்டு வகை உண்டு. 1. நிலவுலகத்தில் வீடு மனை பொன் பொருள் என்று அனுபவிப்பது. 2. இந்த நில உலக வாழ்க்கையை நீத்த பின்னால் வைகுந்தத்தில் நிலை பெற்ற செல்வங்களாகிய பக்தி ஞானம் தொண்டு முதலியவற்றைப் பெறுவது. பொதுவாக பிராட்டியைப் பிரார்த்தனை செய்தால் இந்த உலகச் செல்வங்களை மட்டும்தான் தருவாள் என்று நினைக்கிறார்கள். உண்மையில் வைகுண்ட வாழ்க்கையையும் தன்னுடைய புருஷகாரத்தால் வாங்கிக் கொடுப்பவள். அதனால் தீர்க்க சரணாகதியை அவளை முன்னிட்டுச் செய்ய வேண்டும்.**





"ஸ்ரீ" என்றாலும் "திரு" என்றாலும் "அதிசயத்தை விளைவிப்பவள்" என்று பொருள் கொள்ளத்தக்கது. எல்லார்க்கும் அதிசயத்தை விளைவிப்பவளான அவள் தனக்கு அதிசயத்தை விளை விப்பவளான அவள் தனக்கும் அதிசயத்தை விளை விப்பவள் என்று எம்பெருமான் கருதுகின்றனாம். இந்த இடத்தில் பரஸ்பர வியப்பு என்கிற அதி ஆச்சர்யமான வாக்கியத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். பிராட்டிக்கு எம்பெருமானுடைய சம்பந்தத்தினால் அதிசயம்; எம்பெருமானுக்கு பிராட்டியின் சம்பந்தத்தினால் அதிசயம் இவ்வுலகில் செல்வம், அழகு, நற் குணம் போன்ற அத்தனை ஐச்வரி யங்களும், பிராட்டியினுடைய தொடர்பினால் இருப்பதோடு, மட்டுமே அடங்கியதாக உள்ளது. ஸ்ரீ என்கிற சப்தம், செல்வம், அழகு மற்றும் நற்குணங் களை குறிக்கிறது. அதே சப்தம் பிராட்டியையும் குறிக் கிறது. இந்த "ஸ்ரீ" ஆனது "ஸ்ரீ"யின் மூலமாக அல்லது "ஸ்ரீ"யை உடையதாக இருக்கும் பெருமை உடையது. "திரு" என்கிற சொல்லின் அத்தனை பெருமையும் பிராட்டி யின் தொடர்பினால் அந்தச் சொல்லுக்குக் கிடைக்கிறது என்கிற அருமையைப் பாடுகின்றார் கூரத்தாழ்வான்.

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் தனக்கே உரிய பாணியில் மிக நுட்பமாக விளக்குகின்றார். எம்பெரு மானை "திருவுக்கும் திருவாகிய செல்வா" என்று திருமங்கை ஆழ்வார் பாடுகிறார் (பெரிய திருமொழி 7ம் பத்து). வைணவ மரபில் பிராட்டியின் தொடர்பில்லாமல் எதுவுமில்லை என்று குறிப்பிடும் வண்ணம் திவ்ய தேசம், ஆழ்வார், பணியாரம், நூல் என எதுவாக இருப்பினும் அவை ஸ்ரீ சப்தத்தை முன்னிட்டே குறிப்பிடப்படு கின்றன. உதாரணமாக மலை என்று யாரும் சொல்வதில்லை. "திருமலை" என்று பிராட்டி சப்தத்தை இட்டு சொல்லுகின்றார்கள். பணியாரம் என்று சொல்வ தில்லை. திருப்பணியாரம் திருவாராதனம் என்றே சொல்லுகின்றோம். இராமாயணம் என்று சொல்வதில்லை. ஸ்ரீமத்ராமாயணம் என்றே சொல்லு கின்றோம். அப்படிச் சொல்ல வைத்தவள் பிராட்டி.

இப்படிச் சொல்லிக் கொண்டு வரும் கூரத்தாழ் வான் ஸ்ரீரங்க நாச்சியாரைப் பார்த்துப் பாடுகின்றார். "ஸ்ரீ ரங்க நாச்சியாரே! உம்முடைய மேன்மையின் எல்லை யானது உமக்கு மணாளனாக அமைந்த ஸ்ரீரங்கநாத னாலும் அறிய முடியாது. சரி அவனால் அறிய முடிய வில்லை. உன் பெருமையின் அளவு உமக்கும் தெரி யாது. இந்த விஷயத்தில் நீயும் அறியாதவளே." "அறியாத தன்மையினால் அறிந்தவராகிறார்கள் என்கிற கருத்தின்படி சொல்ல முடியாத மேன்மை என்கிற எல் லையை அறிய முடியாததால் உங்கள் இருவரின் மேன் மைக்கும் எந்த குறையும் இல்லை." ஒருவரின் எல்லை நிர்ணயிக்க முடியாது என்று தெரிந்து தானே சொல்கி றோம். இப்படி இருவரின் பெருமையைச் சொல்லிவிட்டு கலைமகளைப்பற்றிய ஒரு விஷயத்தைப் பாடுகிறார்.

இந்த உலகத்தில் ஒருவரை மரம்போல் நிற்கிறாயே என்று ஜடப் பொருளாக (அறிவற்றவன் மற்றும் செயலற் றவன்) என்று சொல்கின்றோம். அதேசமயம் இன் னொருவனை மகா அறிவாளி என்று போற்றுகின்றோம். இந்த அறிவின் ஏற்றத்தாழ்வுகள் கலைமகளின் திருவருட் கருணையின் பலனாகக் கிடைப்பதாக கூறுகின்றனர்.

ஆனால் அவளுக்கு அந்த ஆற்றல் எப்படி கிடைத் தது என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதில்லை. ஒருவரை அறிவில் பிரகாசிக்கச் செய்கின்ற சரஸ்வதி அந்த ஆற்றலை ஸ்ரீரங்க நாச்சியரின் அடியவராக இருந்து பெறுவதால் அந்த நாச்சியாரின் திருவடிகளை யும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளையும் நாம் சரண் புக வேண்டும் என்கிறார். இப்படிச் சொல்லிவிட்டு உலகம் தழைக்க அவள் அருட்கருணை காரணம் என்கிற உண்மையை நிறைவு சுலோகத்தில் சொல்கின்றார்.

இப்படி எல்லையற்ற குணக்கடலான பிராட்டியின் பெருமையை தன்னுடைய அமுதமயமான வாக்கினால் பாடிய கூரத்தாழ்வானைப் பணிந்து, இந்த பதினோரு சுலோகங்களையும் பொருளுணர்ந்து பாடி, பிராட்டியின் புருஷகாரம் பற்றி பெருமானின் பேர் அருள் பெற சரண் புகுவோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்

## கார்த்திகை பிரம்மோத்ஸவம்

## 2020 நவம்பர் 11 முதல் 19 வரை

11-11-2020 புதன் கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

12-11-2020 வியாழக்கிழமை
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

13-11-2020 வெள்ளிக்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

14-11-2020 சனிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

15-11-2020 ஞாயிற்றுக்கிழமை
பகல் : பல்லக்கு உற்சவம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

16-11-2020 திங்கட்கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

17-11-2020 செவ்வாய்க்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

18-11-2020 புதன் கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்



19-11-2020 வியாழக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



அண்மையில் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் ஏகாந்தமாக
நடைபெற்ற பார்வேட்டை உத்ஸவம்



திருமலையில் தரிகொண்ட வேங்கமாம்பா நித்ய அன்னப்பிரசாத கூடத்தில்
பக்தர்களிடம் உரையாடும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்
டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் கூடுதல்
செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.,
அவர்கள் இதர தி.தி.தே. உயரதிகாரிகளுடன்
திருமலையில் பல்வேறு பகுதிகளை தணிக்கை செய்த போது



உலக நன்மைக்காக தி.தி.தே. செய்த ஷோடசதின சுந்தர காண்ட
பாராயண தீக்ஷை நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பூர்ணாஹுதி
நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர்
டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். மற்றும் உயரதிகாரிகள்



அண்மையில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்
டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள்
திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாரை தரிசனம் செய்தபோது



நவராத்திரி உத்ஸவ நிறைவை முன்னிட்டு திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதி தாயார் உத்ஸவமூர்த்தி ஸ்ரீமகாலக்ஷ்மி
அலங்காரத்தில் யானை வாகனத்தில் எழுந்தருளி
பக்தர்களுக்கு தரிசனமளித்தத் திருக்காட்சி



திருமலையில் கல்யாணகட்டாவை தணிக்கை செய்யும் தி.தி.தே.
செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ். அவர்கள்,
கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



அண்மையில் மத்திய கண்காணிப்புத்துறை ஆணையத்தின் வேண்டுகோளிற்கிணங்க நாடு முழுவதும் நடைபெற்ற ஊழல் ஒழிப்பு, பாதுகாப்பு விழிப்புணர்வு
வாரோத்ஸவத்தின் பகுதியாக தி.தி.தே. ஊழியர்களுடன் உறுதிமொழி
ஏற்கும் தி.தி.தே.செயலாட்சித்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்



ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு.பி.அர்ஜுன் ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவி ஏற்றபோது



02–10–2020 அன்று ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர் திரு.எம். கிரிஜாசங்கர் ஐ.ஏ.எஸ். அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவி ஏற்றபோது





10–10–2020 அன்று டாக்டர். கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் தி.தி.தே. புதிய செயலாட்சித்தலைவராக பதவி ஏற்ற பின்னர் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் உயர் அதிகாரிகளுடன்...



# சத்யபாமா தேவியின் பெருமை

– திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி,
கேரளா, 99461 28102.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் எட்டு பட்ட மஹிஷி களில் ஒருவர் தான் சத்யபாமா. இவள் சத்ராஜித் அரசனின் மகள். இவள் பூமி தேவியின் அவதார மாகப் போற்றப்பட்டாள். மிகவும் அழகானவள் கண்ணன் மீது அபார காதல் கொண்டவள்.

## ஸ்ரீகிருஷ்ண சத்யபாமா திருக்கல்யாணம் :

சத்ராஜித்திடம் சூரிய பகவான் அளித்த "ஸ்யமந்தக மணி" ஒன்று இருந்தது. ஆனால் அந்த மணி உலக மக்களுக்காக பயன்படவில்லை. கண் ணன் அந்த மணியை உலக நன்மைக்காக தரும்படி கூறினார். சத்ராஜித் மறுத்தார். ஒரு நாள், சத்ரா ஜித்தின் தம்பி பிரசேனன் அதை எடுத்துக் கொண்டு காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அவனை ஒரு சிங்கம் தாக்கியது. அவன் மாண்டான். அந்த மணியை சிங்கம் எடுத்துக் கொண்டது. அப் போது, ஜாம்பவான், அந்த சிங்கத்தை கொன்று அம் மணியை எடுத்து வந்து, தன் மகளான ஜாம்பவதியி டம் கொடுத்தான்.

மணியை காணாததால் சத்ராஜித் கண்ணனை சந்தேகிக்க, கண்ணன் அம்மணியைத் தேடி காட்டிற் குச் சென்றார். ஜாம்பவான் மகளான ஜாம்பவதியை மணந்து மணியுடன் திரும்பி வந்தார். சத்ராஜித்தும் மனம் வருந்தி கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டான். தன் மகளான சத்ய பாமாவை கண்ணனுக்கு திருமணம் செய்து வைத்தான். இவ்வாறாக, கண்ணன் சத்யபாமா திருமணம் நடந்தேறியது.

## நரகாசுர வதம் :

நரகாசுரன், பூதேவியின் மகன். பகவானின் வராக அவதாரத்தின் போது தோன்றியவன். அவன் கடும் தவம் செய்து மிகுந்த பலம் பெற்றான். அது மட்டுமல்லாமல், தனக்கு தன் தாயின் கையால் தான் மரணம் ஏற்பட வேண்டும் என்று பிரம்மனிடம் வரம் பெற்றான். இதனால் மிகவும் கொடூரமாக நடந்து கொண்டு தேவர்களின் தாய், பல அரசரின் மகள் என்று 16,000 பெண்களை துன்புறுத்தி வந்தான். இந்திரன் வேதனை பட்டு, கண்ணனிடம் உதவி வேண்டினான்.

கண்ணன், தன் தேவி சத்யபாமாவுடன் கருடன் மீது அமர்ந்து கொண்டு நரகாசுரனின் அனைத்து

வீரர்களையும் அழித்தான். உடன் வந்த சத்யபாமா தேவியும், தேரில் ஏறி யுத்தம் புரிந்தாள். நரகாசுரனின் ஒரு அம்பு கண்ணனைத் தாக்கியது. இதைக் கண்டு கடும் கோபம் அடைந்த தேவி சத்யபாமா, நரகாசுரன் மீது அம்பு எய்தினாள். பூமிதேவியின் அவதாரமாகக் கருதப்படும் சத்யபாமா எய்த அம்பு, நரகாசுரனைத் தாக்கியது. அவன் இறந்து போகும் தருவாயில் ஞானம் பெற்றான். ஏனெனில், தாயின் கையால் மரணமடையப் போகும் இவனுக்கு தேவி



*வந்தே வ்ருஷகிரீஷய்ஸ*
*மஹிஷீம் விஷ்வதாரிணீம்*
*தத்க்ருபாப்ரதிகா தாநாம் க்ஷமயா வாரணம் யயா* – தயாசதகம்.

தயைக் காட்டினாள். அவன், தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டு, தான் இறக்கும் இந்நாளில் பூலோகமே தீபம் ஏற்றி கொண்டாடவேண்டும். எல்லா தீர்த்தங்களும் புனிதமாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். மனம் மாறியதால் கண்ணனும், சத்யபாமாவும் அவ்வாறே அருளினார்கள். நாம் கொண்டாடும் “தீபாவளி” பண்டிகை நரகாசுரனின் மரணத்திற்காக அல்ல, அவன் மனம் திருந்தி, உலக நன்மைக்காக தீப வழிபாடு மற்றும் புனித ஸ்நானத்தின் மகிமையை வெளிப்படுத்தியதற்காகத்தான். தீபாவளி தினத்தன்று

## மங்கள நாயகிக்கு குங்குமார்ச்சனை

**ஸ்ரீபத்மாவதி தாயார் உத்ஸவ மூர்த்திக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி முகமண்டபத்தில் அர்ச்சகர்களால் அஷ்டோத்திரம் ஓதப்பட்டு தாயாருக்கு குங்குமம் சமர்ப்பிக்கப்படும். இதனை லக்ஷ்மி பூஜை என்பர். தினமும் மதியம் வேளையில் மூலமூர்த்திக்கு குங்குமார்ச்சனை நடைபெறும். சூழ்நிலையை பொறுத்து தி.தி.தே. டிக்கெட்டுகள் வழங்குவதை பொறுத்து இந்த சேவையில் பொதுமக்கள் கலந்து கொள்ளலாம்.**

**குங்குமம் என்பது மங்கள சின்னம். பெண்கள் தங்கள் கணவர் நலமாக இருக்க விரும்பி தன் நெற்றியில் அணியும் பொருளாகும். மங்கள நாயகியான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நவம்பர் மாதத்தில் அதாவது பிரம்மோத்ஸவத்திற்கு முன் லக்ஷ குங்குமார்ச்சனை வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுவது விசேஷமாகும். இதில் ஆயிர நாமங்கள் கொண்ட சஹஸ்ர நாமார்ச்சனை பண்ணுவர்.**



எல்லா தீர்த்தத்திலும் கங்கா தேவி வாசம் செய்வாள். உலகத்தில் உள்ள இருள் நீங்கி, தீயது எறிந்து, ஒளிப் பிரகாசமான வாழ்வு அளிக்கும் என்பது நம்பிக்கை. நரகாசுரனுக்கு இறுதி நேரத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றியதற்குக் காரணம் தாய் சத்யபாமா உடன் இருந்ததால் தான். பகவானுடன் தாயார் இருந்தால் தான் அந்த ஜீவன் நற்கதி அடைவான் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். சத்யபாமா, பூமியின் அவதாரம் என்பதால், அவள் பொறுமை, நிதானம், க்ஷமை போன்ற குணங்கள் இந்த ஜீவாத்மாக்களை பகவானிடம் பயமின்றி அணுகுவதற்குக் காரணமாகின்றன. திருக்கல்யாண குணங்களால் இந்த ஜீவாத்மா முக்தி பெறுகிறான் என்பது ஐயமில்லை.

**பாரிஜாதமலர் ;**

கண்ணன் துவாரகையில் ருக்மணி சத்யபாமா இருவருடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, ஒருநாள் நாரதர் ருக்மணியிடம் இந்திரலோகத்து பாரிஜாத மலர்மாலையைக் கொடுக்கிறார். அதைக் கண்ட சத்யபாமா தனக்கும் பாரிஜாத மலர் மாலை வேண்டும் என்று கண்ணனிடம் கேட்க, கண்ணன் இந்திரனுக்கு தூதனப்பி இன்னொரு மலர் மாலையைத் தரும்படியாகச் சொல்ல, அவன் அதை பூலோகத்துக்கு அனுப்ப முடியாது என்று மறுக்கிறான். நிலைமை அறிந்த காசியப முனிவர் சமாதானப்படுத்துகிறார். இந்திரன் தவறை உணர்ந்து, அந்த பாரிஜாத மரத்தை சத்யபாமாவின் வீட்டுத் தோட்டத் தில் நடுகிறான். தினமும் காலையில் பாரிஜாத மலர்களைப் பரிப்பதற்கு சத்யபாமா செல்வாள், ஆனால் ஒரு மலர் கூட கிடைக்காது.



ஏனெனில், மலர்கள் எல்லாம் ருக்மிணி பிராட்டியின் மாளிகையில் வீழ்கின்றன. இதைக் கண்டு சத்யபாமா கோபம் அடைந்தாள். நாரதமுனி அங்கு வந்து அந்த பாரிஜாத மலர்களால் ருக்மிணி கண்ணனை ஆராதிப்பதாகவும் மற்றும் கண்ணன் அவளுக்கு அதை சூட்டி விடுவதாகவும் கூறினார். இதைக் கேட்டு கடும் சினம் கொண்டு கண்ணனை தாமே உரிமை கொள்வதற்கான ஒரு வழியை நாரத முனியிடம் வேண்டினாள். நாரதர் தமக்கு கண்ணனை தானமாக கொடுத்து பின்னர், அதற்கு நிகராக எதையாவது கொடுத்து கண்ணனை சத்யபாமா மீட்கலாம், அப்போது கண்ணன், சத்யபாமாவிற்கே உரிமையாவான் என்று கூறினார். அவ்வாறே ஒரு நல்ல முஹூர்த்தத்தில் கண்ணனை தாரை வார்த்து கொடுத்தாள் சத்யபாமா. கண்ணனும் அந்த லீலையை கண்டு களித்துக் கொண்டிருந்தார்.

**துலாபாரம் :**

இப்போது கண்ணன் நாரத முனியின் சேவகன் (தானம் கொடுத்



தவர்) ஆனார். நாரத முனி கூறுவதை எல்லாம் கேட்டார். சத்யபாமா, மீண்டும் கண்ணனை உரிமையாக்குவதற்கு ஒரு துலாபாரம் நிகழ்ச்சியை ஏற்படுத்தினார். அதில், கண்ணன் தராசின் ஒரு தட்டிலும் மற்றொரு தட்டில் பல தங்க பொருட்கள், நாணயங்கள், ஆடை, அணிகலங்கள் எல்லாம் வைக்கப்பட்டன. ஆனால் தராசு சமமாக வில்லை. சத்யபாமா எல்லாவற்றையும் வைத்தாலும் ஒன்றும் பயனில்லை. பின்னர் தேவி ருக்மிணி, ஒரு துளசி இலையை பகவானை பிரார்த்தனை செய்து தராசுத் தட்டில் வைத்தார். உடனே, தராசு சமமானது. இதைக் கண்ட சத்யபாமா மகிழ்ச்சியடைந்து, கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டாள்.

இந்நிகழ்ச்சி, தேவி சத்ய பாமா நமக்கு ஒரு நல்ல விஷயத்தை புரிய வைப்பதற்காக இந்த நாடகத்தை நடத்தினாள். பூமி தேவி தானே அவள் ! அதனால் தாமே அதை நிகழ்த்தினாள். பகவானிடம், தாயாரை முன்னிட்டு எதை சமர்ப்பித்தாலும், அவர் ஏற்பார். அது பொன்னோ விலை உயர்ந்த பொருளோ அல்ல. தூய மனதுடன் சமர்ப்பித்தால் அவர் ஏற்பார் என்பது தெளிவாகிறது.

மேலும், பகவான் எல்லோருக்கும் உரிமையானவன் ஒருவர் மட்டும் பகவானை உரிமையாக்க முடியாது. மனைவி என்பவள் குல விளக்காகத் திகழ வேண்டும், கணவனுக்கு நல்ல வழிகாட்டியாகவும் இல்லறம் நடத்தும் முறை, பெண்களின் சிறப்பு, அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பன பற்றியும் பல நல்வழிகளை உரையாடல் மூலம் உலகிற்குக் காட்டு கிறார்.

இவ்வாறு தேவி சத்ய பாமா, உலகத்தின் நன்மைக்காக எவ்வாறு ஜீவராசிகள் வாழ வேண்டும், நல்வழி பெற வேண்டும் என்று வழியை காண்பிக்கிறாள்.



## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 51க்கான பதில்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | த் | மா | 2 வ | தி | 3 ஆ | | ய | ஜ | 4 வி | த் | யா |
| ரி | லி | 5 ம | ர | 6 க | த | வ | ல் | லி | தே | 7 தை | 8 சீ |
| ம | ல் | ல | ல | ன | | | ரை | | வா | ரி | 9 தீ |
| ள | வ | ர் | க்ஷ | 10 க | ம் | ல | ம | 11 க | ர் | ய | ப |
| வ | ண | ம | மி | ஜ | | | 12 தா | ம் | 13 பூ | ல | ம் |
| ல் | 14 கு | ங் | கு | ம | ம் | | | ர | மி | | ய |
| லி | ர | கை | 15 நா | ச் | சி | யா | ர் | தி | தே | | ர் |
| ல் | 16 வ | கு | ள | வ | ல் | லி | | த் | வி | ன | 17 த |
| வ | 18 அ | ழ | கி | ய | வ | ல் | லி | மு | | தா | ந் |
| த | ஷ் | 19 ஸ்ரீ | நி | வா | ச | ன் | | 20 ச | | ந் | 21 சௌ |
| மு | ட | தே | | மி | க்ஷ | ல | ஹா | 22 ம | ஞ் | 23 ச | ள் |
| 24 அ | ர | வி | ந் | த | வ | ல் | லி | ல் | வ | த | 25 வே |



# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்

திருமதி எஸ். வைஷ்ணவி,
திருப்பதி, 99893 76756

**திருச்சுகனூர் எனும் திருச்சானூர்...**

ஸ்ரீபத்மாவதி தாயார் கொலுவீற்றிருக்கும் ஆலயம் திருப்பதியிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் திருச்சுகனூர், அலர்மேல் மங்காபுரம் மற்றும் திருச்சானூர் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் ஊரில் அமைந்துள்ளது. திருப்பதியிலிருந்து ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து வசதி கொண்ட இத்தலத்தில் பிரம்மாண்ட நாயகனின் பட்டத்து ராணியான அலர்மேல் மங்கை தாயாரை தரிசிக்கலாம்.

**பாற்கடலிலிருந்து பூலோகத்திற்கு...**

மும்மூர்த்திகளை சோதிக்க முற்பட்ட ப்ருகு மகரிஷி வைகுண்டத்திற்குச் சென்று தன்னை கவனிக்காத விஷ்ணுவின் திருமார்பை காலால் உதைக்க, அத்திருமார்பை தன் உறைவிடமாகக் கொண்டு உறையும் திருமகள் கோபம் கொண்டு, வைகுண்டத்தை விடுத்து, பூலோகத்தில் கொல்ஹாப்பூருக்குச் சென்றார். திருமகள் இல்லாத வைகுண்டத்தை விடுத்து மஹாவிஷ்ணுவும் பூலோகத்தில் சேஷாசலத்தில் ஸ்ரீநிவாசராக வகுள மாதாவிடம் (துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் தாயார் யசோதை) வளர்ப்பு மகனாகி, பன்னிரெண்டு ஆண்டுகள் கடும் தவமியற்றி ஆகாச ராஜனின் மகளான ஸ்ரீபத்மாவதி தாயாரை மணம் புரிந்தார்.

**ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம் ...**

கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் பட்டத்து மஹாராணியான ஸ்ரீஅலர்மேல் மங்கை என்கிற ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சானூர் திருக்கோயிலில் தனித்து எழுந்தருளி கோடான கோடி மக்களின் இன்னல்களை போக்கும் “கற்பகத்தரு” வாக வீற்றிருக்கிறார்.

ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு தினசரி சேவைகள், மாதாந்திர சேவைகள், வருடாந்திர சேவைகள் என அனைத்து வகையான சேவைகள் பாஞ்சராத்ர ஆகமப்படி நடைபெற்று வருகின்றன.



**தினசரி சேவைகள்...**

திவ்விய மங்கள ஸ்வரூபிணியான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு சுப்ரபாத சேவையில் ஆரம்பித்து திருக் கல்யாண உத்ஸவம், ஊஞ்சல் உத்ஸவம், சஹஸ்ர தீபலாங்கார சேவை, ஏகாந்த சேவை என பல்வேறு சேவைகள் தினந்தோறும் நடைபெறுகின்றன.

**வாரந்திர சேவைகள்...**

அலர்மேல் மங்கை தாயாருக்கு வாராந்திர சேவைகளான விஷேச பூஜை, சஹஸ்ர கலசாபிஷேகம், திருப்பாவாடை சேவை, அபிஷேகம், குங்கும அர்ச்சனை, வஸ்திரலங்கார சேவை, வெள்ளித்தோட்ட அபிஷேகம் போன்ற பல்வேறு சேவைகள் நடைபெறு கின்றன.

**மாதாந்திர சேவைகள்...**

ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு தினசரி, வார சேவைக ளுடன் ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதம் நட்சத்திரம், திதிகளுக்குரிய சேவைகள் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. அவற்றில் தாயார் அவதரித்த திருநட்சத்திர திருநாளில் சிறப்பான முறையில் பூஜைகள் நடைபெறுவதை காணலாம்.

**ஆகாச மஹாராஜன் நாராயணவனம் எனும் பகுதியை ஆண்டு வந்தார். அவர் புத்திர காமேஷ்டி யாகம் செய்ய, நிலத்தை தோண்டும் பொழுது தாமரையில் படுத்தவண்ணம் ஒரு பெண் குழந்தை கிடைத்தது. அக்குழந்தைக்கு பத்மாவதி என்று பெயர் வைத்தனர்.**




**ஒரு நாள் வனத்தில் தோழிகளுடன் உலா வந்த ஸ்ரீபத்மாவதி தேவியை, அங்கு வேட்டைக்காக வந்த ஸ்ரீநிவாசர் கண்டு, காதல் கொண்டு, ஆகாச ராஜாவின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். இந்நிகழ்வின் அடையாளமாக ஆகாச ராஜன் நாராயணவனத்தில் இவ்வாலயத்தை நிர்மானித்தார்.**

**ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருமார்பில் தாயார் வீற்றிருக்கிறார். இங்கு ஸ்ரீபத்மாவதி தாயார், ஸ்ரீஆண்டாள் சன்னதிகளும் உள்ளன. திருப்பதியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்திலும், புத்தூரிலிருந்து 3 கி.மீ. தூரத்திலும் இவ்வாலயம் அமைந்துள்ளது. திருப்பதியில் இருந்து பேருந்து வசதியும் உள்ளது.**



## திருமலையில் நடைபெறும் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் :

ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் ஸ்ரீஸ்ரீநிவாசனுக்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் (வைசாக சுத்த தசமி அன்று முடிவடையும் விதமாக) மூன்று நாட்கள் மிகவும் விமரிசையாக நாராயண உத்யானவனத்தில் அதிகாரி, அதிகாரியல் லாதவர்கள், பக்தர்கள் கூட்டத்தின் நடுவே இப்பரிணய உத்ஸவம் நிர்வகிப்பர்.

வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஓத, பக்தர்கள் ஆயிரங்கண்களோடு பார்க்க, திருமலையப்ப ஸ்வாமி யானை வாகனத்தின் மீது வெண்குடை சாமரத்துடன் துவஜபடத்துடன் ராஜோபசாரத்துடன் ஆலய பிரகாரத்திலிருந்து ஸ்ரீதேவி மற்றும் பூதேவியும் பல்லக்கில் வருவர். திருமலையப்ப ஸ்வாமி இரண்டாம் நாள் குதிரை வாகனத்திலும், மூன்றாம் நாள் கருட வாகனத்திலும் எழுந்தருளுவார். எதிர் எதிராக பீடத்தின் மீது எழுந்தருளிய ஸ்ரீபூதேவியர் மற்றும் திருமலையப்ப ஸ்வாமிக்கு புஷ்பமாலை சமர்ப்பணை அர்ச்சகர்கள் நடத்துவர். இவ்வாறு மும்முறை நடைபெறும். இதனை மாலை மாற்று தல் அல்லது புஷ்பமாலை சமர்ப்பணை என்பர். அதன் பின்னர் வேதோபசாரணையுடன் வஸ்த்திரம் சமர்ப்பணை செய்தபின் ஸ்ரீபத்மாவதி பரிணயம் நிறைவடையும்.

ஸ்ரீபூதேவியருடன் ஒய்யாரமாக ஸ்ரீஸ்ரீநிவாசர் சேர்ந்து அர்க்ய, பாத்ய ஆசரணைகள், ஆசமனங்கள், நைவேத்திய உபசாரங்களை ஏற்று, ஆசார்ய வழியாக ருக்வேத, யஜுர் வேத, சாம வேத மற்றும் அதர்வண வேத உபசாரணைகளை மிகவும் அழகாக ஏற்று, மதுரமான சங்கீதங்கள், பரத நாட்டியங்கள் நிறைவடைந்த பின்னர் ப்ரதக்ஷணமாக ஆலயத்திற்கு வந்தடைவார்.

### வருடாந்திர சேவைகள்...

பவித்ரோத்ஸவம், வஸந்தோத்ஸவம், தெப்போத் ஸவம், பிரம்மோத்ஸவம், புஷ்பயாகம் என பல்வேறு உத்ஸவங்கள் தாயாருக்கு நடைபெறுகின்றது. இவற்றில் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் பிரம்மோத்ஸவம் தாயாரின் திருநட்சத்திரத்தில் பஞ்சமி திதி (பஞ்சமி தீர்த்தம்) அன்று நிறைவடையும் வகையில் நடை பெறுவது காண கண் கோடி வேண்டும்.

### ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதி...

திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயார் அமர்ந்த திருக் கோலத்தில் பின் இருக்கரங்களில் தாமரை (கமலம்) மலர்களை ஏந்திய வண்ணமும், வலக்கரம் அபய ஹஸ்த மாகவும், இடக்கரம் வரத ஹஸ்தமாகவும் காட்சியளிப்பது நமக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தாயாரை தரிசனம் செய்து பிரதக்ஷணமாக வலம் வரும் போது அங்கு பக்தர்கள் தங்களுடைய சிறு காணிக்கைகளை, வேண்டுதல்களை செலுத்தும் உண்டி யலை காணலாம். அதனைத் தொடர்ந்து துவஜஸ் தம்பத்தை பார்க்கலாம். அதனைத் தொடர்ந்து ஆலயத் தின் பின் பகுதியின் அருகே பெரிய நாகத்தின் வடிவை பார்க்கலாம்.

கோயிலின் கருவறை கூரையானது தங்க முலாம் பூசப்பட்டதாகும். கோயில் கோபுரத்தில் அஷ்ட லக்ஷ்மி களை நாம் கண்டு வணங்கலாம். அந்த அற்புத வடிவான கருவறை கூரையை "சாந்தி நிலையம்" என்று அழைப்பர். அதில் "விமான லக்ஷ்மி"யை கண்டு தரிசிக்கலாம். அதனைத் தொடர்ந்து சென்றால் தீர்த்தம், சடாரி, அத னோடு பிரசாதங்களையும் நாம் பெறலாம்.

### ஸ்ரீகிருஷ்ணர் (அழகிய பெருமாள்) சன்னதி...

ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் ராஜகோபுர வாயிலின் எதிராக அமைந்துள்ள சன்னதியே ஸ்ரீஅழகிய பெருமாள் என்கிற ஸ்ரீகிருஷ்ணர் சன்னதி. இங்கு இந்த எம்பெருமானுக்கு பங்குனி மாதத்தில் விசேஷமாக உற்சவங்கள் நடைபெறுகின்றன. ஸ்ரீகிருஷ்ணர் சிலையானது பன்னிரெண்டாம் நூற்றாண்டினை சார்ந்ததாக அறியப்படுகிறது.

### ஸ்ரீசுந்தரராஜப் பெருமாள் சன்னதி...

தாயார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மற்றொரு சன்னதி ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி சன்னதி. ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி, ஸ்ரீமகா விஷ்ணுவின் ஓர் ஸ்வரூபம். தேவர்களுள் கோடி அழகுயுடைய சுந்தரனாய் திகழ்வதால், ஸ்வாமி இப்பெயரால் போற்றப்படுகிறார். கர்ப்பகிரகத்தில் ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியை தரிசிக்கலாம்.

ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி மூர்த்தி, ஆனி மாதம் சதயம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமியன்று கண்டெடுக்கப்பட்டதால், 1906ஆம் ஆண்டு ஹாதிராம்ஜி மடத்தின் மஹந்த் “அவதார உத்ஸவம்” துவங்கினார். 2006ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் “சுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவத்தின்” சதாப்தி (100 வது) திருவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த உற்சவம் சதய நட்சத்திரத்தன்று தொடங்கி, உத்திரட்டாதி நட்சத்திரத்தில் நிறைவடையும். புராணத்தின் படி உத்திரட்டாதி ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் ஜன்ம நட்சத்திரமாகும்.

### சூரிய நாராயணர் ஆலயம்...

ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள இந்த சூரிய நாராயணர் ஆலயத்தை பற்றி ஸ்ரீவேங்கடாசல மஹாத்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீமஹாவிஷ்ணு தவமியற்றிய போதும், ஸ்ரீபத்மாவதி தாயார் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலரில் பத்மசரோவரத்தில் ஆவிர்பவித்தபோதும் சூரிய நாராயணர் பங்கு மிகுத்தானது. இந்த ஆலயத்தில் சூரிய நாராயணர் 20 அடி உயரத்தில் கருமையான கல்லினால் வடிக்கப்பட்டுள்ளதை தரிசிக்கலாம். இங்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. இக்கோயிலில் அனைத்து சேவைகளும், பூஜைகளும் வைகானச ஆகம முறைப்படி நடைபெறுகிறது.

## ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாயிகுண்டா

**உலகப் புகழ்பெற்ற திருமலை அருகில் உள்ள பழமையான வேங்கடேஸ்வர ஆலயங்களில் அப்பளாயிகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயமும் ஒன்று.**

**திருவேங்கடமுடையான் நாராயணவனத்தில் ஆகாச ராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதியை திருமணம் செய்தபின் ஸ்வாமி பத்மாவதியுடன் திருமலைக்கு நடந்து செல்லப் புறப்பட்டார்.**

**சித்தேஸ்வர ஸ்வாமி என்பவர் இங்கு திருவேங்கட முடையானை நினைத்து தவமிருக்க, அந்த தவத்திற்கு மனமிறங்கி ஸ்வாமி அபய திருக்கரங்களுடன் தரிசனமளித்ததாக தல புராணம் கூறுகின்றது. திருச்சானூரிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ள இக் கோயிலுக்கு மணிக்கு ஒரு முறை பேருந்து வசதி உள்ளது.**



நம் பாரதத் திருநாட்டில் சிற்பம், சித்திரம், நடனம், இசை என்று எந்தக் கலையானாலும் அது தெய்வ பக்தியுடன் சம்பந்தப்பட்டதுதான். கலைகளை தெய்வ பக்தியிலிருந்து பிரிக்கவே முடியாது. அதிலும் இசை என்பது இறைவனுக்கு இசைப்பதற்காகவே பிறந்தது. உபவேதம் எனப் பெயர் பெற்றது.

திருமலை திருவேங்கடமுடையானின் அத்யந்த பக்தரான அன்னமய்யா பெருமாளின் "நந்தகம்" எனும் வாளின் அம்சமாகவே பிறந்தவர். "பதகவிதை பிதாமகர்" என்னும் பட்டப் பெயர் கொண்ட இவர் எத்தனையோ பாடல்களை இயற்றியுள்ளார். அவருடைய பாடல்களை பக்தர்களுக்கு கொண்டு சேர்க்க தி.தி.தே. பெரிய அளவில் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஸ்ரீபத்மாவதி தாயாரைப் பற்றி அவர் இயற்றியுள்ள சில பாடல்களை அறிந்து அனுபவிப்போம்.

**1) வரலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி :**

அன்னமய்யா மஹாலக்ஷ்மி தாயாருடைய பெருமைகளைப் பேசி "நாங்கள் உன்னைச் சேர்ந்தவர்களேயன்றி வேறல்லர். எங்களுக்கு ஆசிகள் அளித்து காப்பாற்றுவாய்" என்று வேண்டுகிறார்.

"அம்மா, வெற்றியையும் துணிவையும் தரவல்லவள் நீயே! தாமரை மணத்துடன் பாற்கடலினின்றும் எழுந்தவள் நீ. மஹாவிஷ்ணுவின் திருமார்பில் நளினமாய் வீற்றிருக்கும் நீ ஏழுலகும் காப்பவள். எங்களையும் காப்பாற்று". "சந்திர சகோதரியே! எங்கள் அகத்தினில், மனதில் வாழ்ந்து எங்களை ஆசிர்வதிப்பாய்" என்றும் வேண்டுகிறார். எத்தனை அற்புதமான விஷயம்! அப்படி யாசிக்கவும் அவள் அருள் வேண்டுமன்றோ? அவ்வருள் அன்னமய்யாவிற்கு கூடியிருப்பதால் தானே இப்படி ஒரு வேண்டுகோளை அவள் முன் வைக்கிறார்? "நீ வேதங்களை என்றும் வாழச் செய்பவள். ஆம், அவளுக்கு வேதவல்லி என்றொரு பெயர் உண்டே! செல்வத்தை வேண்டுபவர்களுக்கு விரும்பி அளிப்பவளே! பதினாறு வித அழகும் பொருந்தியவளே! எங்களைக் காப்பாய்" என்றும் வேண்டுகிறார்.

**2) வச்செனு அலமேலுமங்கை :**

அழகிய தேவி அலர்மேல் மங்கை. அவளுடைய தோழிகளும் அழகாகத்தானே இருப்பர்? அப்படியேதான் கூறுகிறார் அன்னமய்யா இப்பாடலில். அலர்மேல் மங்கை வந்தாள் எங்ஙனம்? பல அழகிய தோழிகள் சொர்ணவிளக்கேந்தி வரவும், சிலர் வண்ண வண்ண சாமரங்கள் ஏந்தி வரவும் அழகிய இளமங்கையான அலர்மேல் மங்கை வந்தாள் என்கிறார்.

அவள் கூறும் மொழிகளோ தேன்போல் இனிப்பு. தேடி வரும் கிளிகளோ வண்ணக்கோலம் கொண்டு கொஞ்சுபவை. கால் சலங்கைகளோ

# அன்னமய்யா போற்றும் தாயார்



திருமதி மைதிலி சம்பத்,
செகந்திராபாத், 8125616876



கிளுகிளுக்கின்றவை. அவள் தன் வடிவழகினால் வசீகர மானவள். ரம்பையும், மற்ற அப்ஸரஸ்களும் ஒயிலாக ஆடி அவளைத் தொழுது ஆசி வேண்டுகின்றனர். அவள் தான் திருவேங்கடவனுடைய நளினமான சதி அலர்மேல் மங்கை. அவள் வரும் உயர்ந்த வைபவம் அன்னமய்யா வின் பார்வையில் இவ்விதமாய் போற்றப்படுகிறது.

**3) குலுகக நடவரோ :**

இப்பாடல் தாயார் அலர்மேல் மங்கை அமரும் பல்லக்கைத் தூக்கி வரும் தோழிகளை "மென்மையாக நடந்து செல்லுங்கள். தாயார் அலர்மேல் மங்கையின் பூவுடல் தாங்காது" என்று எச்சரிக்கை செய்கிறார். பின்னே பூவுலகின் அத்தனை பக்தர்களுக்கும் அவள் ஜனனி என்றாலும், அவள் இப்போது திருவேங்கடமுடையானின் காதல் மனையால் அல்லவா? அந்த உணர்வோடு பார்க்கும் போது அவள் உடல் எத்தனை மென்மையானது? எத் தனை அழகானது? அவற்றை சீர்குலைக்கும் விதமாக பல்லக்கை அதிரடியாகத் தூக்கக்கூடாது அல்லவா? அதையே தோழிகளுக்கு அறிவுறுத்துகிறார் அன்ன மய்யா. "தாயாரின் வாசமுள்ள மல்லிகைப் பூக்கள் சிதறி விடக்கூடும், அவளுடைய மென்மையான பாதங்கள் நோகக்கூடும். அவள் மார்பினை அலங்கரிக்கும் மாலை கள் நழுவக் கூடும். இப்போதே களைத்து முகம் வியர்த் திருக்கிறதே. அவள் மேல் குளிர்ந்த சந்தனத்தைத்தெளி யுங்கள். இப்போதே அவளுடைய கால் சலங்கைகள் சப்தமிடுகின்றனவே, அவளுடைய புடவையின் விலை மதிப்பில்லா தங்கத்தாலும், முத்துக்களாலும் ஆன குஞ்ச லங்கள் கலைகின்றன. அவளுடைய பதியான திருவேங் கடவனின் அணைப்பில் சரியாகப் பொருந்தும் அவளுக்கு முத்துக்களாலும், இரத்தினங்களாலும் ஆன ஆரத்தி சுற்றுங்கள்'' என்றெல்லாம் தாயாரைப் பற்றி மகிழ்ந்து பாடுகிறார்.





**4) சூடரம்ம சதுலாரா :**

இந்தப்பாடலில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி என்று போற்றப்படும் ஸ்ரீஆண்டாள் பற்றி எழுதத் தொடங்கும் அன்னமய்யா, பின்னர் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் பெருமைகளை யும் அவளுக்கென்ன குறைச்சல் என்று உலக வழக்கில் கூறுவது போல் கூறி அவளுடைய பெருமைகளை எடுத்து வைக்கிறார். இன்னும் கேட்டால் தமிழ் நாட்டில் ஆண்டாள் நாச்சியார் என்று தான் சொல்வது வழக்கம். அந்தப் பதத்தையே இங்கும் பிரயோகிக்கிறார்.

"தோழிகளே! ஒரு கல்யாணப்பாட்டு பாடுங்கள். தன் ஆபரணங்களை பெருமா ளுக்கு அளித்த பெண்மணி அவளைச் சேரப் போகிறாள்" என்று தொடங்குகிறார்.

ஸ்ரீமஹாலக்ஷ்மி எங்கும் நிறைந்தவள். எல்லாம் நிறைந்தவள். அவளுடைய செல்வம்தானே உலக மாந்தர் அனைவரை யும் வாழ்விக்கிறது. இங்கு அன்னமய்யா மஹாலக்ஷ்மியின் கண்ணுக்குத் தெரிந்த மறை பொருட்களான குணநலச் செல்வங்கள் அனைத்தை பற்றியும் ஆனந்தமாக வர்ணிக் கிறார். பெண்ணின் தோழிகள், திருமணத்



தன்று முக்கிய ஸ்தானம் வகிக்கும் மணப்பெண்ணுக்கு அத்தனையாக நற்குணங்கள் இல்லாவிடினுமே உயர்த்திக் கூறுவர். இங்கோ மஹாலக்ஷ்மியாகிய கோதா தேவி மணப்பெண். என்ன புகழ்ந்திடினும் அவை குறைவுதானே!

திருமகளுக்கு ஆபரணங்களுக்கென்ன குறைவு! மன்மதனுடைய தாயான அவளுக்கு நளினத்தில் குறைவுண்டோ? அவளும், சந்திரனும் பாற்கடலில் உதித்ததால் அவள் சந்திர சகோதரி. எனவே, அங்க லாவண்யங்களும் நிறைந்தவள். இளம் வயதிலேயே வேங்கடவனைப் பதியாக வரித்து விட்டவள். பாற்கடலில் பிறந்த அவளுக்கு கம்பீரத்துக்கு மட்டும் குறைவா? அமைதியும், நளினமும், அழகும் நிறைந்திருந்தாலும் கூடவே ஒரு கம்பீரம் அவளிடம் உள்ளதல்லவா. திருப்பாற்கடல் தந்த பரிசாக அவள் லோகத்தின் தாய். தாய் என்பவளே ஒரு தயா ஸ்வரூபம் அல்லவா?


அதற்குத் தான் குறையுண்டோ அவளிடம்? தண்ணென்று இருக்கும் தாமரை மலர்மேல் உள்ள அவளிடம் அத்தன்மை மட்டும் குறைவாக இருக்குமோ? அவளுக்கு இணை சொல்லத்தான் யார் உண்டு?

அமரர் வணங்கும் அவளிடம் அற்புதங்களுக்குப் பஞ்சமா? அமிர்தத்தோடு கூடப் பிறந்த அவளுக்கு ஆனந்தத்திற்குத்தான் பஞ்சமா? திருவேங்கடமுடையானே வந்து தனக்கு மாலைசூட்டிய இந்த இளம் பெண்ணை மணம் செய்து கொள்கிறான். தோழிகளே! அவர்களைப் பார்த்து மங்கலப் பாடல்களை இசையுங்கள். இதை விடவும் தாயார் பெருமாள் கல்யாணத்தை அனுபவிக்கவும், அந்த அனுபவ ஆனந்தத்தை மற்றவரோடு பகிரவும் அன்னமய்யாவைத் தவிர யாரால் முடியும்?

### 5) பிடிகிட தலம்ப்ராலு :

தலம்ப்ராலு என்பது மணமக்கள் ஒருவர் தலைமீது ஒருவர் பொழிந்து கொள்ளும் அட்சதை. அலர்மேல் மங்கை, திருமகள், திருமண வைபவத்தில் அவள் ஆடை அணிகலங்களாலும், அவளுக்கே உரித்தான அங்க லாவண்யங்களாலும், முக காந்தியாலும் எப்படி ஜொலித்திருப்பாள்? அந்தக் கண்கொள்ளா காட்சியை ஆனந்தமாக வர்ணிக்கிறார் அன்னமய்யா.

இங்கு மணமகன் வேங்கடபதி. மணப் பெண்ணான அலர் மேல் மங்கை தலைமீது அட்சதையை



பொழியும்போது வெட்கத்துடன் கூடிய புன்சிரிப்புடன் தலையைத் திருப்பிக் கொள்கிறாளாம். இந்த இளம் மங்கை தன் நளினத்தி னால் தன் பதியையும் மிஞ்சியவள். அழைக்கப்பட்டுள்ள மங்கையர் நடுவே தன் கணவனின் பெயரை உச்சரிக்க வெட்கப்படுகிறாளாம். கணவனுடன் நெருங்கி உட்கார்ந்திருக்கும் அவள் கூந்தலில் நிறையப் பூக்களையும், காலில் சிலம்புகளையும், வகைவகையான புடவைகளையும் அணிந்திருக்கிறாள். இப்படி அழகே வடிவெடுத்து வந்தது போன்ற அவள் தன் கணவனின் அணைப்பில் ஒரு பொக்கிஷமாகத் திகழ்பவள். மனக்கண் கொண்டு இவ்வர்ணனைகளைப் பார்ப்பவர்களுக்கு மெய்சிலிர்க்க வைக்கிறார் வேங்கடபதியின் அத்யந்த பக்தரான அன்னமய்யா.



#### 6) அலுருலுகுரியக :

இந்தப் பாடல் மலர்கள் பல மலரும் வேளையில் தெய்வ மங்கை அலர்மேல் மங்கை நட னமாடி மகிழ்வதை வர்ணிக்கிறது. இதில் சுவையான கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால் இது போலவே குச்சுப்புடி யக்ஷகானத்தில் நடனம் ஆடுபவர்கள் தன் கால்கள் மட்டுமே தெரிய திரைக்குப் பின்னால்தான் தன் அறிமுகப்பாடலுக்கு நடனம் செய்வர். அதுபோல் சலங்கைகள் பிரத்யேகமாக சப்தமிடுவது இன்றும் கதக் நாட்டியத்தில் முக்கியமான அம்சம். இது உலகைக் காக்கும் தாயார் அலர்மேல் மங்கை தன் கணவர் வேங்கடபதியுடன் ஊடல் கொண்டிருப்பதை சித்தரிக்கும் பாடல். தெய்வத் தம்பதிகளுக்கும் ஊடல் இருப்பதாகக் கூறுவது, கூறும், கேட்கும் மானிடருக்கு இன்பம் பயப்பதன்றோ! அன்னமய்யாவின் அழகிய கற்பனையில் தன் கணவரான வேங்கடபதி பார்க்கக்கூடாது என்று அலர்மேல் மங்கை திரைக்குப் பின் ஆடுகிறாளாம். திரையின் கீழ் தெரியும் அவள் பாதங்களின் திருப்பாதங்களையும், தாண்டுதலையும் கண்டே திருமலையான் மனம் பாதி உருகி விடுகிறது. அவள் பாத அணிகள் தரையைத் தேய்த்து தாள கதியில் ஆடவும், அவை ஒளி வீசவும் அழகாய் ஆடுகிறாள். அவள் திரும்பித் திரும்பி ஆடும் போது திருவேங்கடமுடையானும் அதை அனுபவிக்கிறார். காதல் பொங்கும் பாடல்களுக்கு அவள் காற்சதங்கைகள் ஒலிக்க அவற்றாலேயே தன் பதியின் மனம் மகிழ்வடையச் செய்து விடுகிறாள். இது குட்சுப்புடி நடன மேடைகளில் அடிக்கடி காணக்கிடைக்கும் ஒரு பாடலாகும்.

#### 7) ஒகபாரிக்கொக்கபாரி :

தெய்வத்தம்பதிகளான வேங்கடமுடையானையும் அலர்மேல்மங்கையையும் வருணிக்கும் உற்சாகம் அவ்விருவர் புகழ் பாடவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அன்னமய்யாவின் இந்தப் பாடலில் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிகிறது. மிகவும் மனதிற்குப் பிடித்த தெய்வத்தைப் பார்க்கும் போது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு புது அழகு புலப்படுமல்லவா?

அவள் சர்வலோக ஜனனி. அவள் முகத்தில் காருண்யம், வாத்ஸல்யம், சாந்தம் இவற்றால் அளவில்லா அழகு நிச்சயமாக குடி கொண்டிருக்கும். மனம் முழுவதும் அவளையே நினைத்துப் பார்ப்பவருக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அழகு தென்படத் தான்செய்யும். அதை அன்னமய்யாவை விட யார் அனுபவித்திருக்க முடியும்? அவர் கூறுகிறார், அவள் மிக அழகு. அசைவுகளில் நளினம். வேங்கடபதியின் உடலில் தூவிய கற்பூரத் துகள் அவர் மனைவியின் மார்பகங்கள் மீது வீழ்கின்றது. அது ஒளி பொருந்திய நிலா வெளிச்சம்

அவள் உடலில் பட்டு மின்னுவது போல் உள்ளது.

எப்போதும் சிங்கம், மதயானை, காளை போன்றவற்று டன் தன் நாயகனை ஒப்பிட்டால் தான் தலைவிக்கு விருப்பம். *''காய்சின மாகளிறு''* என்று ஆண்டாள் குறிப்பிடவில்லையா?



அதுபோல் இங்கு வேங்கடவனின் கன்னத்தில் பூசப்பட்ட வாசனைப் புனுகு அவனுடைய மத யானை போன்ற நடையில் கன்னத்திலிருந்து வழிந்து தாடைகளில் வழிகிறது. அவனுடைய நீல வண்ணத் திருமேனியில் ஆபரணங்கள் பளபளக்க அலர்மேல்மங்கை அவன் அருகில் ஜொலிக்கிறாள். அது இருண்ட மேகத்தின் மேல் மின்னல் மின்னுவது போல் உள்ளது.

என்ன அருமை, என்ன அழகு, என்ன அற்புதமான வருணனை?

**8) க்ஷீராப்தி கன்யககு :**

இது தாயாருக்கு கண் திருஷ்டி கழிக்க கற்பூரத்தின் ஒளியை அவள் முகத்தைச் சுற்றிக் காண்பிக்கும் பாடல். மனிதருக்கு நேரும் எந்தக் கொடுமையும் தம் இஷ்ட தெய்வத்திற்கும் நேர்ந்து விடக்கூடாது என்ற பக்தர்களின் ஆதங்கத்தால் வந்ததுதான் இவ்வழக்கம். பெரியாழ்வார் கண்ணனுக்கு திருவந்திக்காப்பு இடுவதை இங்கு நினைவு கூற வேண்டும்.

திருப்பாற்கடலில் பிறந்து, தாமரை மலர்மேல் வாசம் செய்யும் மஹாலக்ஷ்மிக்கு ஆரத்தி என்பது பல்லவி.

அழகிய ஸ்தனங்களை உடையவள். அவளுக்கு பௌர்ணமி போல் கற்பூர தீபம் காட்டுவோம். அவளுடைய கொண்டையாக முடியப்பட்ட கேசத்திற்கும், தாமரையை பிடித்திருக்கும் கைக ளுக்கும் மாணிக்க ஒளி காட்டுவோம்.

அவளுடைய பாதங்களுக்கும் வாழை மரம் போன்ற எல்லா பாகங்களுக்கும் பலன் தரக்கூடிய உன்னத உடலுக்கும் என்றும் முத்து ஆரத்திக் காட்டுவோம்.

அவளுடைய இடை, இன்னும் மற்ற அவய வங்களுக்கும் பக்தி நிரம்பிய பல வர்ண ஆரத்தி காட்டுவோம்.

வேங்கடபதியின் புகழ் வாய்ந்த பட்டத்து ராணியான அவள் எல்லா நற்குணங்களும் கொண்டவள். அவளுக்கு மங்கள ஆரத்தி. அனைத்து நற்குணங்களும் பொருந்திய அலர்மேல் மங்கைக்கு உயர்ந்த, உன்னதமான மங்களகரமான ஆரத்தியைக் காண்பிப்போம்.

இத்தனை அருமையான பாடல்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன என்றால் அங்கு அரசாண்ட சாளுவ நரசிம்மனுக்குத் தான் நன்றி செலுத்த வேண்டும்.

ஏனெனில் அவர்தான் அன்னமய்யா சங்கீர்த்தனைகள் காலத்தால் அழியாதபடி அவற்றை செப்பு பட்டயத்தில் எழுத வைத்து திருமலையப்பன் கோயில் பிரகாரத்தில் ஒரு அறையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

அவை சென்ற நூற்றாண்டில் நமக்கு கிடைத்தன. அவற்றை செப்புப் பட்டயமாக வைத்திருந்ததாலன்றோ இப்போது நமக்குக் கிடைத்தன? இல்லாவிடில் இவ்வரிய பொக்கிஷத்தை நாம் இழந்திருக்கக்கூடும்.

நாம் திருவேங்கடமுடையானின் அருள் பெற தாள்ளப்பாக்கம் அன்னமய்யாவின் புகழ் போற்றி அவருடைய பாடல்களைப் பாடி, திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீபத்மாவதி தாயாரை சரணடைவோம்.



# தாயாருக்கு சமர்ப்பிக்கப்படும் நைவேத்யங்கள்

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி,94401 20758






*"நமாமி தர்ம நிலையாம் கருணாம் லோகமாதரம்
பத்மப்ரியாம் பத்ம ஹஸ்தாம் பத்மாக்ஷீம் பத்ம ஸௌந்தரீம்।
பத்மோத்பவாம் பத்ம முகீம் பத்மநாபப்ரியாம் ரமாம்
பத்ம மாலாதராம் தேவீம் பத்மினீம் பத்மகந்தினீம் ॥"*

ஸ்ரீமஹாலக்ஷ்மி சதநாம அஷ்டோத்ரத்தில் போற்றப்பட்டிருக்கும் மேற்கண்ட சுலோக வரிகள் நமது அலர்மேல் மங்கையான ஸ்ரீபத்மாவதி தாயாருக்குப் பொருத்தமாக உள்ளது. அழகான இந்த பூலோகத்தில் அலர்மேல் மங்கை அவதரித்த வரலாறு அற்புதமானது. ஆயிரம் இதழ்கள் கொண்ட தங்கத் தாமரையில், திருச்சுகனூர் எனப்படும் திருச்சானூர் திவ்ய திருத் தலத்தில் பத்ம சரோவரத்தில் ஆவிர்பவித்தாள் தாயார்.

இந்த அற்புத அவதாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முதலில் ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீநிவாசனாக கலியுகத் தெய்வமாக ஆனதை சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்து சுகபோகங்களையெல்லாம் விட்டு விட்டு பூலோகத்துக்கு இறங்கி வந்து வகுளா தேவியின் வளர்ப்பு மகன் ஸ்ரீநிவாசனாக ஆனது நமக்கு தெரிந்த விஷயமே. துவாபர யுகத்தில் எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்த போது, அந்த கண்ணனை சீராட்டி– பாராட்டிய தோடு செல்லமாக கடிந்து கொண்டும் அந்த கண்ணனின் பாலலீலைகளைப் பரிபூர்ண மாக அனுபவித்தவள் ஆயர்குல சீமாட்டியான யசோதா தேவி. அவளுக்கும் ஒரு குறை இருந்ததாம். தான் அருமை பெருமையாக வளர்த்த மகனின் திருமணத்தைக் காணவில்லையே என்று. தாயை தெய்வமாக மதிக்கும் தனயன் அந்த தாயின் குறையை இந்த கலியுகத்தில்







தீர்த்து வைக்க சங்கல்பம் கொண் டான். அந்த யசோதா பிராட்டியே வகுளா தேவியாக அவதரித்து, அவள் மூலமாகவே ஆகாச ராஜனின் திருமகளாக அவதரித்த ஸ்ரீபத்மாவதி தேவிக்கும், ஸ்ரீநிவாச னுக்கும் நாராயண வனம் திவ்ய க்ஷேத்திரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் புஷ்பமாரி பொழிய தெய் வத் தம்பதிகளின் பரிணயம் கோலாகலமாக நடைபெற்றது.

பின்னர் இருவரும் அகத்திய முனிவரின் வேண்டுகோளின் படி ஆறுமாத காலம் ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் சேர்ந்து தாம்பத்யம் நடத்திய பின்னர், கலியுகம் முடியும் வரை ஸ்ரீநிவாசப் பெருமாள் கலியுகத்தெய்வமாக திருமலையிலும், ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சானூரில் சாம்ராஜ்ய லக்ஷ்மியாக தனியாட்சி செய்து, தங்களை நாடி வரும் பக்தர்களை ரக்ஷிக்கவும் சங்கல்பம் கொண்டார்கள்.

இந்த அலர்மேல் மங்கைத் தாயார் சாக்ஷாத் ஆனந்த நிலைய வாசனின் தயை ஸ்வரூபம். தான் முதலில் பக்தர்களின் கோரிக்கைகளையும், பிரார்த்தனைகளையும் கேட்டுக் கொண்டு அவர்கள் செய்த பாபங்களி லிருந்து அவர்களுக்கு



முக்தியளித்து, பின்பு தனது மணாள னிடம் அவர்களை அனுப்பி வைக்கி றாள். திருமலையப்பனின் திருமார்பில் "அகலகில்லேன்" என்று வீற்றிருந்து "வியூக லக்ஷ்மியாக" திருமார்பு நாச்சியா ராக கொலுவிருந்து பக்தர்களுக்காக சிபாரிசு செய்யும் கருணைக்கடலாகத் திகழ்கிறாள்.

ஆகவே தான் எம்பெருமான் பக்தர் களை முதலில் திருச்சானூர் சென்று ஸ்ரீபத்மாவதி தாயாரை சேவித்து விட்டு பிறகு என்னிடம் வாருங்கள் என்று உரைத்ததோடு, திருமலையில் தனக்கு நடைபெறுகின்ற பூஜைகளும், உற்ச வாதிகளும் ஒரு குறையுமில்லாமல் பக்தி

## பவித்ரோத்ஸவ மஹோத்ஸவம்

வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறுகளுக்கு பரிகாரமாக பாத்ரபத (ஆவணி) மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் உத்ஸவம் பவித்ரோத்ஸவம். இந்த உத்ஸவத்தின் போது ஆலயத்தில் உள்ள அனைத்து மூல மூர்த்திகளுடன் , உற்சவ மூர்த்திகளுக்கும் பவித்திர மாலைகள் சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த உத்ஸவம் அங்குரார்ப்பணத்துடன் தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறுகிறது



## தீப ஒளியில் திவ்விய மங்கள நாயகி



கார்த்திகை மாதம் என்றாலே தீபம் ஏற்றுவது எல்லோரும் அறிந்ததே. மாலை நேரத்தில் நாம் வசிக்கும் வீட்டின் முன்னர், வீட்டிற்குள், ஆலயத்தில் என பல்வேறு இடங்களில் தீபம் ஏற்றுவது நம் பண்டைய முறை. திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் சஹஸ்ர தீபாலங்கார சேவை நடைபெறுகிறது. ஜொலிக்கும் விளக்கின் ஒளியின் நடுவில் பத்மாவதி தாயார் ஜொலிக்கும் அழகினை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. சிறப்பான முறையில் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீபத்மாவதி தாயார், வரிசைவரிசையாக வைக்கப்பட்ட தீபங்களின் ஒளியின் நடுவில், ஒய்யாரமாக ஊஞ்சல் சேவையை ஏற்றுக்கொள்வது என்பது நம் அனைவரின் தீய எண்ணங்களை அந்த தீப ஒளியில் எரித்து, நல்ல எண்ணங்களை நமக்கு வரமாகப் பிரசாதிப்பதாக அமைகின்றது.

சிரத்தையுடன் திருச்சானூரில் தனியாட்சி செய்யும் தாயாருக்கும் நடைபெற வேண்டும் என்று கட்டளை யிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல. தனக்கு சமர்ப் பிக்கப்படும் தளிகை, நிவேதனங்கள், பிரசாதங்கள் அனைத்தும் தினப்படியிலும், உத்ஸவ சமயங்களி லும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். திருமலையில் ஆனந்த நிலை யத்தின் உள் பிரகாரத்தில் ஸ்ரீநிவாசப் பெருமானின் தாயாரான வகுளாதேவிக்கு ஒரு சன்னதி உள்ளது. இந்த தாயாரை “மடைப்பள்ளி தாயார்” என்பார்கள். இவரது மேற்பார்வையில் தான் எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் தளிகைகள், நிவேதனங்கள் தயாராகிறதாம். மகனின் ஆரோக்கியத்தில் ஒரு தாய்க்கு தானே அக்கறை இருக்கும். இனி இந்த கட்டுரையில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு சமர்ப்பிக்கப் படும் நிவேதனங்களைப் பற்றிப் பார்ப்போம்.

தாயருக்கோ, பெருமாளுக்கோ சமர்ப்பிக்கப் படும் நிவேதனங்களுக்கு ஒரு அளவு உண்டு. இதை “திட்டம்” என்பார்கள். இந்திந்த நாளில் செய்யப்படும் பிரசாதங்கள் எந்த அளவில், எந்த முறையில் செய் யப்பட வேண்டும் என்பதற்கு ஆகம சாஸ்திரத்தில் விதிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்தெந்த கோயில்களில் எந்த வகையில் மூலமூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்களோ அதற் கேற்றார்போல சமர்ப்பிக்கப்படும் தளிகையின் அள வும் வேறுபடும். அந்த வகையில் திருமலை திருப் பதி


## தங்கத்திருத்தேர்




**திருச்சானூரில் திருவேங்கடமுடையானின் பட்டத்து மகாராணியான அலர்மேல் மங்கை தாயார் பிரம்மோத்ஸவத்தில் ஆறாம் நாள் மாலையில் நடைபெறும் தங்கத்திருத்தேர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மாலை நேரத்தில் ஆதித்யனின் ஒளிக்கதிர்கள் தங்கத்திருத்தேரின் மீது பட்டு ஜொலிக்க, மாதர்கள் தங்கள் உள்ளத்தின் இதயராணியான வரங்களை அளிக்கும் வரலக்ஷ்மியான ஸ்ரீபத்மாவதி தாயாரின் திருத்தேரை நான்கு மாட வீதிகளில் வடம் பிடித்து இழுப்பது கண் கொள்ளா காட்சியாக அமையும்.**















தேவஸ்தானம் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு சமர்ப்பிக்கப்படும் நிவேதனங்களுக்கு ஒரு வரைமுறையை ஏற்படுத்தியுள்ளது.

திருமலையானுக்கு ஸ்ரீவைகானச ஆகமப்படி பூஜைகள், உற்சவங்கள் நடைபெறுவது போல, திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு அனைத்து பூஜாக்ரமங்களும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படி நடைபெறுகின்றன. ஆகவே, தளிகை விஷயங்களிலும் அந்த ஆகம சாஸ்திர வல்லுனர்களின் அபிப்ராயங்களையும், சிபாரிசுகளையும் கேட்டு, அதன் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன. பெரிய பெரிய கங்காளங்களில் (பித்தளை பாத்திரங்கள்) நிரப்பப்பட்டு தாயாருக்கு கண்டருளப் பண்ணுகிறார்கள். முதலில் தினப்படிகளில் செய்யப்படும் நிவேதனங்களைப் பார்ப்போம். ஸுப்ரபாதம் முடிந்து அர்ச்சனை, ஆராதனம் ஆனதும் நைவேத்யத்துக்கான முதல் மணி ஒலிக்கும். அப்போது புளியோதரை, ததியோதனம் எனப்படும் தயிர் சாதம், பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சீரா எனப்படும் கேசரி ஆகியவை தாயாருக்கு நைவேத்யம் செய்யப்படும். இதில் ததியோதனம் எனப்படும் தயிர் சாதத்தில் உப்பு, கடுகு முதலானவை சேர்க்கப்படுவதில்லை. இதை மாத்திரை என்பார்கள். சாதம் முழுமையாக வேகவைக்கப்பட்டு பாலும், தயிரும் கலந்து நன்றாகப் பிசைந்து மெத்தென்று செய்யப் படுவதே மாத்திரை. இது நமது திருவேங்கட முடையானுக்கு மட்டுமல்ல, அவரது பிராணேஸ்வரி யான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் மிகவும் உகந்ததாம்.

அடுத்து பகல் இரண்டாம் மணி ஒலித்ததுமே திரும்பவும் மாத்திரை மட்டுமே. சாயங்காலம் ஊஞ்சல் சேவையின் போது சுண்டல் மட்டுமே. இரவு மணி ஒலிக்கும் போது திரும்பவும் புளியோதரை, தயிர்சாதம், சர்க்கரை பொங்கல் நிவேதனமாகும்..

இரவு ஏகாந்த சேவையின் போது இலவங்கம், ஏலக்காய், குங்குமப்பூ போட்டு சுண்ட காய்ச்சிய பாலில் சர்க்கரை சேர்த்து அமுது செய்விப்பார்கள். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஊஞ்சல் சேவை ஆனதும் கதம்ப சாதம். பின்பு ஆஸ்தானத்தின் போது புளியோதரை, தோசை, சுண்டல் ஆகியவை நிவேதனம் செய்யப்படுகிறது. வியாழக்கிழமை

# தெப்போத்ஸவத் திருவிழா



**ஸ்ரீபத்மாவதி தாயார் இக்கலியுகத்தில் பத்ம சரோவரத்தில் ஆவிர்பவித்தது அனைவரும் அறிந்ததே. அந்த புனிதமான தெப்பத்திருக்குளத்தில், குளிர்ந்த நீரில், அகம் குளிர்ந்து, உலா வந்து பக்தர்களுக்கு தரிசன மளிக்கும் உத்ஸவமே தெப்போத்ஸவம். அந்த ஜகன் மாதாவான பத்மாவதி தேவியின் தெப்போத்ஸவம் ஆனி மாதம் ஏகாதசி முதல் பௌர்ணமி வரை 5 நாட்கள் சிறப்பான முறையில் நடைபெறும். தெப்போத்ஸவத்தின் முதல் நாள் மாலை ருக்மணி சத்ய பாமா உடனுறை ஸ்ரீகிருஷ்ணரும், இரண்டாம் நாள் ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியும், மூன்றாம் நாள் முதல் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்பத்திருக்குளத்தில் நீராழி மண்டபத்தை சுற்றி வந்து பக்தர்கள் மனம் குளிர காட்சித் தருகின்றார். சர்வாபரணங்கள், மலர்களால் தாயாரையும் திருக்குளத்தை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பூலோக வைகுண்டம் என எண்ண வைக்கும் அளவில் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டு தாயார் வலம் வருவதைக் காண கண் கோடி வேண்டும்.**

களில் திருப்பாவாடையின் போது புளியோதரை, முறுக்கு, ஜிலேபி ஆகியவை நிவே தனம் செய்யப்படுவது வழக்கம். இனி உத்ஸவ காலங்களைப் பார்ப்போம். வருடாந் திர பவித்ரோத் ஸவ சமயத்தில் எலுமிச்சை சாதம், தேங்காய் சாதம், லட்டு, வடை, பாதுஷா போன்ற பட்சணங்களும் தாயாருக்கு கண்டருளப் பண்ணப் படுகிறது.

பிரம்மோத்ஸவத்தின்போது தினப்படி நைவேத்தியங்களோடு, இரவு ஏகாந்த சேவையின் போது க்ஷீரான்னம் அமுது செய்விக்கப்படுகிறது. தற்போதைய காலங்களில் திருமலையைப் போலவே லட்டு, வடை இரண்டும் தாயாருக்கு நிவேதனம் பண்ணப்பட்டு யாத்ரிகர்கள் பிரசாதமாக ஊருக்கு எடுத்துச் செல்ல வழி வகை செய்துள் ளார்கள்.

திருமலையில் பூந்தி சலித்து சர்க்கரை பாகோடு சேர்த்து முந்திரி, பாதம் போன்ற பருப்பு வகை களைச் சேர்த்து லட்டு பிடிப்பார்கள். திருச்சானூரில் பூந்தி லட்டு வழக்கமில்லை. கடலை மாவை நெய்யில் வறுத்து, ஏலம், பச்சை கற்பூரம் சேர்த்து, சர்க்கரை பாகில் கொட்டி லட்டு பிடிப்பது வழக்கமாகி உள்ளது. ஸ்ரீபத்மாவதி தாயாரின் கார்த்திகை பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாளான பஞ்சமி தீர்த்த நன்னா என்று விசேஷமாக நெய்யால் தாயாரிக்கப்பட்ட லட்டு, வடை, முறுக்கு, அப்பம், ஜிலேபி ஆகியவை தாயாருக்கு நிவேதனமாக திருமலையிலிருந்து கொண்டு வரப்படுகிறது. மொத்தம் 42 கூடைகள். ஆக மொத்தம் 102 உருப் படிகள் இருக்கும். யானை மீது சீர்வரிசைகளும், தொடர்ந்து இந்த பிரசாதங்களும் வலம் வருவதைப் பார்க்க பக்தர்களுக்கு கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாக இருந்தாலும், தனது இன்னுயிர் துணைவியின் அவ தார தினத்தைக் குறிக்கும் வகையில் அவர் அனுப்பி வைக்கும் இந்த சீர்வரிசைகளைப் பார்க்கும்போது இந்த தெய்வ தம்பதிகளுக்கு ஒருவர் மேல் ஒருவருக்கு இருக்கும் அன்பும், அபிமானமும் நமக்கு விளங்குகிறது அல்லவா! கலியுகத் தெய்வம் திருவேங்கடமுடையான் இந்த கலியுக புருஷர் களுக்கு தானே ஒரு முன்னுதாரணமாக விளங்கு கிறார்.

# பெரிய பிராட்டியார்

# ஸ்ரீ பத்மாவதி தாயார்



டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

சுகமுனிவர் தவம் செய்து முக்தி பெற்ற இடமாதலால் திருச்சுகனூர் என்ற பெயர் வழங்கலாயிற்று, இது தற்போது திருச்சானூர் என்று மருவி அழைக்கப்படுகிறது. சில ஊர்களில் தெய்வத்திற்குப் பெருமை வளர்ந்திருக்கும், சில இடங்களில் தீர்த்தத்திற்கு மகிமை மலிந்திருக்கும். திருச்சானூரிலோவென்றால் அலர்மேல் மங்கைத் தாயாருக்கும், அவள் தோன்றிய பத்மசரோவரத்திற்கும் உண்டான மகிமை ஒப்புயர்வற்றது. மேலும், திருவேங்கடமுடையான் தன்னை விட்டுச்சென்ற பத்மாவதி தாயாரை மீண்டும் அடைவதற்காகத் தவம் செய்த பெருமையும் தனிப்பட்ட ஒன்றாகும்.

திருச்சானூரைப் பற்றியும், ஸ்ரீபத்மாவதி தாயாரைப் பற்றியும் பாத்மபுராணம் க்ஷேத்ரகாண்டம் 34–ம் அத்யாயம் பறை சாற்றுகிறது.

*“லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்$_3$ ராஜ தநயாம்
ஸ்ரீரங்க நாமே ச்வரீம்”*

என்கிறபடியே ஸ்ரீபத்மாவதி தாயாரானவள் பத்ம சரோவரத்தில் உதித்தமை இங்கு உணரத்தக்கதே. கலைமகளல்லவா இவள்! உயர்வற உயர்நலமுடையவரால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றுத் தத்வதர்சியாய் விளங்கிய நம்மாழ்வார், சர்வ லோக சரண்யனைச் சரணம் புகுங்கால் அவனை முதலில் *“அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா”* என்று விளித்தார். பகவானே தன்னைக் காட்ட அவனைக் கண்ணாரக் கண்டநுபவித்த ஆழ்வார் அருளமுதத்திற்கு மேற்பட தேவநுடைய திருமகள் ஸம்மந்தத்திற்கு வேறு சான்று தேவையில்லை அல்லவா!

*“ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ”
“அஸ்யே சாநா ஜகதோ விஷ்ணுபத்நீ”
“ஈசாநா தேவீ புவநஸ்யாதி பத்நீ”
“ஸ்ரீரஸி இந்திர பத்நீ”
“லக்ஷ்மீம் ஜாதவேதோ ம ஆவஹ”*

என்ற பற்பல வாக்கியங்கள் பிராட்டியைப் படிக்கும் போது பரம புருஷரோடு சேர்த்தே படிப்பதற்குக் காரணம் யாதெனில், பிராட்டியானவள் அந்தரங்க விசேஷணமாயிருக்கையாலும் விசேஷத்தை விட்டு விசேஷணத்துக்கு ஸத்தையில்லாமையாலும் பிராட்டியானவள் தனித்துப் படிக்கப்படாமல் பரம புருஷரோடு சேர்த்தே படிக்கப்படுகிறாள். அதாவது, முதற்பொருளிலே கடத்தைச் சொல்லும்போது கடத்தின் (குடம்) தஸ்மையையும் சொல்லப்படுவது



**சிறிய சேஷ வாகனம் :**
வாருங்கள்! காணுங்கள்! ஸ்ரீதேவி தாயானவள்
சிறிய சேஷ வாகனத்தில் எழுந்தருளி சேவை சாதிப்பதை!!

**பெரிய சேஷ வாகனம் :**
ஏழுத்தலையுடைய ஆதிசேஷன் மீது அமர்ந்து சேவை
சாதிக்கும் அத்தாயின் திவ்விய மங்கள வடிவினை
தரிசித்தால் போதும்! சித்திக்கும் வேண்டுதல்கள்!!

**ஹம்ஸ வாகனம் :**
பொலிக! பொலிக! என்று தங்க ஹம்ஸ வாகனத்தில்
பவனி வரும் பத்மாவதியை தரிசியுங்கள்! அன்னம்
பாலில் உள்ள நீரை மட்டுமே பிரிக்கும்!
பிராட்டி பாலில் உள்ள விஷத்தையும் பிரிப்பாள்!!

**முத்துப்பந்தல் வாகனம் :**
அதோ! முத்துப்பந்தல், உள்ளே அழகே வடிவெடுத்த
அலர்மேல் மங்கை! முத்து குளிர்ச்சியின் அடையாளம்!
தாயன்பு பிராட்டியின் தண் நலத்தின் அடையாளம்!!

**சிம்ம வாகனம் :**
அதிவீர பயங்கரி அலர்மேல் மங்கை! அடியார்களை
காப்பதற்காக பராக்கிரமம் கொண்ட சிம்ம வாகனத்தில்
சிம்ம வாகினியாக எழுந்தருள்கின்றாள்!
ஜயஹோ மாதா! ஜயஜயஹோ!!

**கல்ப விருக்ஷ வாகனம் :**
பாற்கடலை கடைய அதில் உதித்த ஸ்ரீமகாலக்ஷ்மிக்கு
துணையாய் வந்த கல்ப வ்ருக்ஷம் இங்கு தாயாருக்கு
வாகனமாகியது. கேட்பதை அளிப்பது கல்ப வ்ருக்ஷம். பக்தனுக்கு
எது தேவையோ அதை அளிப்பவள் அலர்மேல் மங்கை தாயார்.

**அனுமன் வாகனம் :**
அன்று சீதாபிராட்டியை தன் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள்
ஸ்ரீராமரிடம் கொண்டு சேர்க்கிறேன் என்றான். ஆனால் அது
நடக்கவில்லை. சீதாப்பிராட்டியே கலியுகத்தில் பக்தனின்
கோரிக்கையை நிறைவேற்ற பத்மாவதியாக அனுமன்
வாகனத்தில் சேவை சாதிக்கின்றாள்!

**பல்லக்கில் மோகினி :**
மோகினி அவதாரம் பெருமாளுக்கு அது விந்தையே!
பிராட்டிக்கு அது இயற்கையே! ஸ்ரீபத்மாவதி தாயார்
ஜெகன்மோகினி, விஸ்வரூபிணி!!

போலே ஸர்வேச்வரனைச் சொல்லும் வாக்கியங்களிலெலாம் இவளும் சொல்லப்படுகிறாள். இரண்டாவது பொருளில், பகவானுக்கு ப்ரகார பூதை (ஒப்பானவள்) போலவேயிருக்கையாலே இப்பிராட்டி பலவாக்கியங்களில் பகவானோடு சேர்த்தே படிக்கப் படுகிறாள். அவ்வகையில் திருவேங்கடவனின் திருநாமத்தோடு சேர்த்தே சொல்லப்படுகிறாள். இவ்வாக்கியங்களைக் கூரத்தாழ்வான் தம்முடைய ஸ்ரீஸ்தவத்தில் (1) உறுதிப்படுத்துகிறார்.

*"ஸ்வஸ்தி ஸ்ரீர்தி$_3$ சதாத$_3$சேஷஜகதாம் ஸர்கோப :...*
*...க$_2$லு நாந்யதா?ஸ்ய ரஸதா ஸ்யாதைக ரஸ்யாத்தயா"*

அதாவது, எல்லாவுலகையும் படைத்தளித்து அழிப்பதையும், ஸ்வர்க்கம் நரக மோக்ஷங்களைக் கொடுப்பதையும் செய்யும்போது பகவான் எவளுடைய திருமுகமண்டலத்தைப் பார்த்துக் கொண்டு அதனுடைய இங்கிதத்திநீடு வசப்பட்டவராய் எல்லாக்காரியங்களைச் செய்கிறாரோ, அந்தப் பிராட்டி மங்களத்தை அளிக்கட்டும். பகவான் அவளுடன் ஒரே அபிப்ராயத்தை உடையவளாயிருக்கையாலே அவளுடைய இங்கித பராதீனராகக் காரியங்களைச் செய்யாவிடில் அக்காரியங்கள் ஈஸத்தை (இன்பத்தை) அளிக்க மாட்டா என்றபடி.

*"ச்ரியை ஸமஸ்த சிதசித்$_3$ விதா$_4$நவ்யஸநம் ஹரே:*
*அங்கீ$_3$காரிபி$_4$ ராலோகைஸ் ஸார்த்த$_2$ யந்த்யை*
*க்ருதோஞ்ஜலி:"*

ஸகல சேதனா சேதனங்களையும் படைப்பதால் பகவானுக்குண்டான சிரமத்தை, தன் அங்கீகாரத்தைக் காட்டும் கடாக்ஷங்களாலே ஸபலமாக (சுலபமாக)ச் செல்கின்ற பிராட்டியின் பொருட்டு அஞ்சலியானது செய்யப்பட்டது என்று பட்டரும் அருளிச் செய்தாரிறே. மேலும், ஜகத் ஸ்ருஷ்டி முதலான திருவிளையாடல்களிலே பிராட்டியும் போக்தாவாக அந்வயிக்கிறாளாகையாலும் இவள் "தேவீ", அதாவது ஜகத்ஸ்ருஷ்டி முதலியவைகளை லீலையாக உடையவள் என்று பெயர் பெற்றிருக்கிறாள்.

*"வடியாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்"*
*"திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்*
*திகழ்கின்ற திருமாயார்"* என்றும்
*"அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா"*

என்றும் ஆழ்வார்களாலும், ஸ்ரீராமாயணத்தாலும் புகழும்படி அவனுக்கும் ஒளி கொடுப்பவளாயிருக்கும் இவள் தேவியாகிறாள்.

*''பாஸ்கரேண ப்ரபா$_4$ யதா$_2$ (ஸூர்யனை விட்டுப் பிரியாத ஒளி போல் விளங்குகிறாள் இவள் என்பதற்கிணங்க - தேவீ ''*

"தீவுஸ்துதி" துதிக்கப்படுபவன் தேவறாகிறான். எவரைத் துதித்தாலும் இவனைத் துதித்ததாகும். இவனுக்கு நிரூபக பூதையாலே இவளையும் துதித்த தாகும்.



*''நமாமி பார்க்க$_3$வீம் க்$_2$யாதிம் ஸுகா$_2$ ஸௌம்யாம் ஸுக$_2$ ப்ரதாம்''*

அதாவது, "ப்ருகு மஹரிஷி புத்ரியும், க்யாதி யெனப்படுபவளும், ஸுகரூபையும், அழகியவளும், ஸுகத்தையளிப்பவளுமான பிராட்டி என்று பறை சாற்றப் படுகிறார். எல்லா ஜீவராசிகளாலும் 'கா' (எவள்) என்று தேடப்படுபவளாகையாலே 'கா' எனப்படுகிறாள் பெரிய பிராட்டியான ஸ்ரீபத்மாவதி தாயார். *''கதமா காயாஸா ஸத்யா''* என்று தைத்திரீய உபநிஷத்தாலும் புகழப்படு பவளன்றோ பிராட்டி.

"ஸ்ரீ" என்று பெரிய பிராட்டிக்குத் திருநாமம் (த்வயம் – 123). இம்மந்திரத்திலுள்ள "ஸ்ரீ" என்பது பெரிய பிராட்டியைக் குறிக்கும் திருநாமமாகும். ஸ்ரீ என்பதற்கு, செல்வம், அழகு என்றும் பலபொருள்கள் உண்டு. இவற்றுள் பெரிய பிராட்டியார் என்னும் பொருளே மிகச் சிறந்ததாகும். இப்பிராட்டிக்கு லக்ஷ்மீ, பத்மா, கமலா, ஹரிப்ரியா, க்ஷீரஸாகர ஸம்பவீ, விஷ்ணுபத்நீ, இந்திரா, ஸ்ரீ என்னும் திருநாமங்கள் அநேகம் உள்ளன. இருப்பினும் ஸ்ரீ என்றும் திருநாமத்திற்குத் தனிப்பட்ட சிறப்பு உள்ளது. எவ்வாறு எம்பெருமானுக்கு "அ" என்னும் சப்தம் நிரூபக திருநாமமோ, அவ்வாறே பெரிய பிராட்டிக்கு "ஸ்ரீ" சப்தம் நிரூபக திருநாமம் ஆகும். எங்ஙனம் "அ" என்னும் பதம் ஈச்வரனுடைய ரக்ஷகத்திற்கு இன்றியமையாத இயல்புகளைத் தெறிவிக்கின்றதோ, அங்ஙனம் "ஸ்ரீ" என்னும் பதமும் பிராட்டியாரின் புருஷகாரத்திற்கு (பரிந்துரைக்கு) இன்றியமையாத இயல்புகளைத் தெரிவிக்கின்றது.

ஸ்ரீ என்னும் திருநாமத்துக்கு உள்ள சீர்மை ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் மிக்குள்ளது. *''ஈசானாம் ஜகதோஸ்ய''* என்னும் ப்ரபத்தி சுலோகத்தில் ஒரு தாமரை மலர் தன்னை ஒத்தி இருதாமரை மலர்களை இரு கைகளால் தானேந்தித் திருவேங்கடவன் திருமார்பில் இறையும் அகலாது உறைந்து, அவனது அன்பைப் பெற்ற மனைவியாய், நம்மிடம் பேரன்பு பூண்டு நமக்குத் தாயாய், தந்தையான பெருமாள் நம் குற்றங்கண்டு சீறாமலிருக்குமாறு அவனது பொறு மையை

**கஜ வாகனம் :**
அதோ தரிசியுங்கள்! கஜ வாகனத்தில் கஜ லக்ஷ்மியை! கஜம் ஐச்வர்யம். தாயாரோ ஐச்வர்யத்தையே வாகனமாகக் கொண்டவள்!!

**சர்வ பூபால வாகனம் :**
அதோ! தரிசியுங்கள் சர்வ பூபால வாகனத்தில் ஸப்தகிரி வாசனின் பட்டத்து ராணியை! அவளே அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை! அடியார்களின் தாகத்தைப் போக்கும் ஆகாச கங்கை!!

**கருட வாகனம் :**
வேதவடிவினனான கருடனின் மீது எழுந்தருளும் வேதமாதா ஸ்ரீபத்மாவதி! "பறவையேறு பரம்புருடா" என்கிறார் ஆழ்வார். பெரிய திருவடி கருடன்! கருட மந்திரம் கஷ்டங்களை போக்குவது!!

**சூர்யப்பிரபை வாகனம் :**
"வெய்யக் கதிரோனை விளக்காக" க் காட்டினார் பொய்கையார். "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" எனத் தாயாரை ஞானக் கண்களால் கண்டார் பேயார். இவ்வாகன தரிசனம் ஆரோக்கியம், ஆனந்தம், ஐச்வர்ய ப்ரதம்!

**சந்திரப்பிரபை வாகனம் :**
"நிலா" பெண்ணின் முகத்திற்கு ஒப்புமை. நிலா முகம் கொண்ட ஸ்ரீபத்மாவதி தாயாரை சந்திரப் பிரபை வாகனத்தில் சேவிக்கும் போது உள்ளம் குளிர்கிறது! முகத்திலும் தெய்வீக ஒளி வீசுகிறது!

**திருத்தேர் :**
திருச்சானூர் திருவீதிகளில் மெதுவாக முன்னுக்குச் செல்லும் திருமாமகள் திவ்விய ரதம்! அந்த ரதோத்ஸவ தரிசனம் மனோரதத்தை தீர்க்கும் திவ்விய நற்தரிசனம்!

**குதிரை வாகனம் :**
குதிரை ஐம்புலன்களுக்கு ஒப்புமை, குதிரை வாகனத்தில் எழுந்தருளும் அலர்மேல் மங்கைத் தாயார் பக்தர்களின் ஐம்புலன்களை கட்டுப்படுத்துபவள். கலி, கல்மஷ நாசனம் ! குதிரை வாகனத்தில் தாயார் தரிசனம் !!

**வசந்தோத்ஸவம் :**
"வாடல வாடல வெண்ட்ட வசந்தமு, ஜாடதோ சல்லேரு நீபை ஜாஜர ஜாஜர" என்கிறபடி தோழியர்களுடன் வசந்தத்தை கொண்டாடும் ஒய்யாரி ஸ்ரீபத்மாவதி!



# புஷ்பயாக மஹோத்ஸவம்

**யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவள் மஹாலக்ஷ்மி. யாகத்தினுடைய பயனை அருள்பவள். யாகத்தின் பயனை அனுபவிக்கக் கூடியவள். யாக பலனைக் கொடுக்கக் கூடியவள். அப்படிப்பட்டவள் இந்த யாகத்தை ஏற்று, அதிலே தவறு ஏதாவது நடந்திருந்தாலும், லோபம் இருந்தாலும் மொத்தத்தையும் போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறாள். பிரம்மோற்சவம் முடிந்த மறுநாள் புஷ்ப யாகம் செய்யப்படுகிறது. அதில் புஷ்பங்களாலேயே யாகமாக எல்லாவித மலர்களாலும் கூடை கூடையாக ஐந்து டன்களுக்கும் மேலே ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். அதாவது திருவடியிலிருந்து திருமுடி வரையிலும் சேர்ப்பர். தேவர்கள் பூமாரிப் பொழிவது போலிருக்கும், தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.**

வளர்த்து நம்மை அவறோடு சேர்ப்பிக்கும வளாய், நமக்கு பூஜைக்குரிய தலைவியாய் விளங்கும் திருமகள் ஸ்ரீபத்மாவதி தாயாரல்லவா!

*''தத் க்ஷாந்தி ஸம்வர்த்$_3$தி$_4$ நீம்''* என்னுமத்தால் எம்பெருமானைத் தஞ்சமடைவதற்காக வருகின்ற சேதநர்களிடம் பாவங்களைக் கண்டு அவனுக்கு வரும் கோபத்தை ஆற்றி, அவனிடம் அழுந்திக் கிடந்த, பாவங்களைப் பொறுத்தலென்னும் குணத்தைத் தலையெடுக்கச் செய்து அதனை மேன்மேலும் வளர்ப்பதற்காகவும் பிராட்டி பெருமாள் திருமார்பில் உறைந்திருக்கிறாள். இக்கருத்தையே ''ஸ்ரீ'' பதம் வலியுறுத்துகிறது.

*''த்விபு$_4$ஜா வ்யூஹ லக்ஷ்மீ: ஸ்யாத் பத்$_3$த$_4$*
*பத்$_3$மாஸந ப்ரியா,*
*ஸ்ரீ நிவாஸாங்க$_3$மத்3ய ஸ்த்தா$_2$ ஸுதராம் கேசவ*
*ப்ரியா''*

என்கிறது வராஹ புராண – வேங்கடாசல மாஹாத்மியம். அதாவது பத்மாஸநமாகத் திருவடி களைக் கட்டிக் கொண்டு வீற்றிருப்பதில் விருப்பமுள்ளவளும் ஸ்ரீநிவாஸருடைய திருமேனியின் நடுப்பகுதியான திருமார்பில் இருப்பவளுமான – இரண்டு திருக்கைகளையுடைய வ்யூஹ லக்ஷ்மியானவள் கேசவனான ஸ்ரீநிவாஸனுக்கு மிகவும் அன்புடையவளாக இருக்கிறாள் என்றபடி.

*''வாத்ஸல்யாதி குனோஜ்ஜ்வலாம்''* – *''நிகரில் வாத்ஸல்யம் உஜ்ஜ்வலம்''* என்றாறிறே அழகிய பெருமாள் நாயனார் (ஆ.ஹ்ரு,160). திருவேங்கடமுடையானிடம் ஆச்ரிதர்களுடைய தோஷங்களை போக்யமாகக் கொள்ளும் தன்மையாகிய வாத்ஸல்யம் உஜ்ஜ்வலமாவதற்கு (ஒளிவிடுவதற்கு)க் காரணம் இவளுடைய புருஷகாரமேயாகையால் இவள் வாத்ஸல்யாதி குணங்களால் உஜ்ஜ்வலையாயிருப்பது கையிலங்குக் கனியல்லவா!

பகவதீம் என்பது ஜ்ஞானம், சக்தி முதலிய குணங்களால் நிரம்பப்பட்டவள் என்றபடி. இப்படிப்பட்ட பெருமைகளையுடைய பெரிய பிராட்டியான ஸ்ரீபத்மாவதி தாயாருடைய இன்னருளுக்குப் பாத்திரமாகுங்கள்.



# 2020
# நவம்பர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| (செவ்வாய்) | (யுரேனஸ்) சந்திரன் | ராகு | |
| (நெப்ட்யூன்) | **நவம்பர் - 2020**<br>03 – புதன் –வ.நி.<br>09 – நெப்டியூன் –வ.நி<br>14 – செவ்வாய் –வ.நி.<br>16 – சூரியன் –விருச்சிகம்<br>17 – சுக்ரன் –துலாம்<br>20 – கு ரு –மகரம்<br>28 – புதன் –விருச்சிகம் | | |
| | | | |
| கு ரு ப்ளூட்டோ | | சூரியன் புதன் | சுக்ரன் |


மேஷம்

ராசி நாயகன் செவ்வாய் மாதமுழுவதும் விரய வீட்டில் சஞ்சரிப்பார். குரு தொழில் வீட்டிற்குள் பிரவேசிக்கிறார். பணவரவில் குறை இருக்காது. தனஸ்தானாதிபதியும் தனது நீசஸ் தானத்திலிருந்து வெளியேறி ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும்.


ரிஷபம்

ராசி நாதன் தனது நீச ராசியிலிருந்து வெளியேறி சுயவீடாகிய துலாத்தில் உலவப்போகிறார். அஷ்டம குரு பாதிப்புகள் இம்மாதம் நீங்குகிறது. பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். ஆறாம் வீட்டில் சஞ்சரிக்கும் புதனால் நிறைய பொருள் வரவு வரக்கூடும்.


மிதுனம்

ராசி நாயகன் புதன் ஐந்தாமிடத்தில் உலவிடுகிறார். சுக்ரனும், புதனும் ராசி பரிவர்த்தனை பெற்றுள்ளனர். மாணவர்கள் பெரிதும் பாராட்டப் படுவார்கள். வியாபாரம் நல்ல முன்னேற்றமடையும். எதிர்ப்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்ப நலம் திருப்தி தரும்.


கடகம்

ராசி நாயகன் சந்திரன் தொழில் வீட்டில் அமர இம்மாதம் துவங்குகிறது. ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு ஏழாமிடம் பெயர்ச்சியாகிறார். தடைபட்ட திருமணம் இனி விரைவில் நடைபெறும். சூரியன் ஐந்தாமிடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். பணவரவில் ஏற்பட்ட குறைகள் நீங்கும்.


சிம்மம்

ராசி நாயகன் சூரியன் இம்மாதம் தன நீசராசியிலிருந்து வெளியேறி சுகஸ்தானத்திற்குச் செல்கிறார். குரு ராசிப் பெயர்ச்சியால் தனஸ்தானம் வலிமை பெறுகிறது. பொருளாதார வளர்ச்சி மிகும். வங்கி இருப்பும், வைப்பு நிதியும் அதிகரிக்கும்.


கன்னி

குரு ராசியை நோக்குகிறார். குடும்பத்தில் தடைபட்ட சுபகாரியங்கள் விரைவாக நடக்க ஆரம்பிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படும். செவ்வாய் வக்ர நிவர்த்தி பெறுவதால் வழக்குகளில் வெற்றி கிட்டும். அரசு வழியில் எதிர்ப்பார்த்த அனுகூலம் கிடைக்கும்.


துலாம்

ராசி நாதன் சுக்ரன் ராசியில் சஞ்சரிக்கவும், தொழில் வீட்டிற்குரிய சந்திரன் நல்ல நிலையிலும் உள்ள கிரக நிலைகளால் தொழிலில் அதிக லாபத்திற்கு வாய்ப்புள்ளது. மருத்துவச் செலவு கூடும். ஏழுக்குரிய செவ்வாய் ஆறாமிடத்தில் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணையுடன் ஒத்துப்போவது நல்லது.


விருச்சிகம்

ராசி நாயகன் வக்ர நிவர்த்தி அடைகிறார். லாபஸ்தானத்தை குருவும், செவ்வாயும் நோக்குகிறார்கள். பணப்புழக்கம் அதிகரித்து சுப காரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும். 7ம் வீட்டை குரு நோக்குவதால் திருமண வாய்ப்புகள் கூடி வரும். 3–ல் சனி வலிமையாக உள்ளதால் நல்ல செய்திகள் பல தேடி வரும்.


தனுசு

ராசி நாதன் குரு மகரத்தில் பிரவேசிக்கிறார். அந்த ராசிக்குரிய சனியும் அங்குள்ளதால் குருவிற்கு நீச பங்கம் ஏற்பட்டு ராஜயோக பலனை வழங்குவார். லாபஸ்தான சஞ்சாரத்தாலும், செவ்வாயின் மீன ராசி சஞ்சாரத்தாலும் நிலம், வீடு, மனை வாங்கும் வாய்ப்பு கூடி வருகிறது.


மகரம்

ராசியில் சனியுடன் குருவும் சஞ்சரிக்க உள்ளார். விரயாதிபதி ராசியில் சஞ்சரிக்கும்போது எதிர்ப்பாராத சில செலவுகள் வரும். பதினொன்றில் புதன் உலவுவதால் வாழ்க்கைத் துணை வழியே செல்வம் சொத்துக்கள் சேரும். சூரியனின் சஞ்சாரத்தால் வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும்.


கும்பம்

ராசி நாயகன் சனி12ல் சஞ்சரிப்பினும், அதுவும் அவருக்கு ஆட்சி வீடாகும். எனவே மாற்றங்கள் பலவற்றையும் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். இரண்டிற்குரிய குரு விரய வீட்டில் சஞ்சாரம் மேற்கொள்ளுவதால் எதிர்ப்பாராத சில செலவுகள் வரும். பணவரவில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம்.


மீனம்

ராசி நாயகன் குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். புத்திசாலித்தனம் பளிச்சிடும். செயலில் வேகம் கூடும். தொழில் நுட்பத் திறன் வெளிப்படும். பண நடமாட்டம் திருப்திகரமாக இருக்கும். பெரியவர்களும் அரசியல் பிரபலங்களும் உங்களுக்கு உதவுவார்கள். பிள்ளைகளால் அனுகூலம் உண்டாகும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

---

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/– ஆயுள்சந்தா ரூ.500/–டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

# 16-10-2020 முதல்<br>24-10-2020 வரை நடைபெற்ற<br>திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி<br>பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



















SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-10-2020.
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

